Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-27 | 12-12-2005 | திங்கட் கிழமை | ஓசை-298



தைப்பொங்கல் வரை 15% வீதம்
விசேட சேவைக் கழிவுடன்
உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

T.P:0712-610008
(சீ 13511)

# புலனாய்வுத்தகவல்களைப் பெற வசதியாக புலனாய்வு முகவர்களை நியமிக்க வேண்டும்

## -புதிய இராணுவத்தளபதி சரத்பொன்சேகா




(கொழும்பு)

**புலனாய்வுத் தகவல்களை அதிகளவில் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக புலனாய்வு அதிகாரிகளையும் புலனாய்வு முகவர்களையும் நியமிக்க வேண்டும். கடந்த காலத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு பிரதியீடாகவும் இவ்வாறானவர்கள் நியமிக்கப்படவேண்டுமென சிறிலங்காவின் புதிய இராணுவத்தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

தற்போதுள்ள களநிலைத் தளபதிகள் தேவையான அளவு புலனாய்வுத் தகவல்களைத் தேவையான போது பெற்றுக்கொள்வதில்லை. சில தகவல்கள் கிடைத்தாலும் சம்பவங்கள் நடைபெற்ற பின்பே தகவல்கள் கிடைக்கப்பெறுவதாக அவர் மேலும் கூறினார்.

2000 ஆம் ஆண்டுக்குப் பின் சுட்டுக்கொல்லப்பட்ட புலனாய்வு அதிகாரிகள், முகவர்களுக்கு பிரதியீடாக நியமனம் செய்யப்படவேண்டியதன்மையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பிரிவின் தகவலின் படி 40இற்கும் மேற்பட்ட புலனாய்வுச் செயற்பாட்டாளர், முகவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கீரபன்



சுகன்யா



கொழும்பில் நாளை முதல் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சிறிலங்கா-இந்திய கூட்டு கடற்படைப் பயிற்சிக்காக இந்தியாவிலிருந்து வந்துள்ள 'கீரபன்', 'சுகன்யா' ஆகிய இரு இந்தியக் கடற்படைக் கப்பல்களை படங்களில காணலாம்.

# வவு.வைத்தியசாலையில் சிகிச்சைபெற்ற பெண்ணொருவர் ஆயுததாரிகளால் கடத்தல்

## காவலுக்கு நின்ற பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் பலி

(செட்டிகுளம்)

வவுனியா பொதுமருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் பொலிசாரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டதன் பின்னர் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இந்தப்பெண்,கடந்த ஆறாம் திகதி மன்னார் பகுதியில் ஐந்து பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சமயம் சைனட் உட்கொண்டு வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் எனப் படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் வைத்தியசாலைக்குள் பிரவேசித்த இனந்தெரியாதவர்கள் காவலில் நின்ற பொலிசார் ஒருவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ய, பின் பக்கத்தினால் வந்த மூன்றுபேர் துப்பாக்கி தாரியோடு இணைந்து மேற்படி பெண்ணைக் கடத்தி சென்றுள்ளனர். இந்தப் பெண்ணுக்கு ஐந்து பொலிசார் பாதுகாப்பு வழங்கி வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படையும் பொலிசாரும் இணைந்து மண்டைதீவில் சுற்றிவளைப்புத் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நேற்று சிறிலங்காக் கடற்படையும் பொலிசாரும் இணைந்து பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை நடத்தியுள்ளனர். காலை ஒன்பது மணிதொடக்கம் மதியம் 12.00மணிவரை இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது மண்டைதீவு மக்கள் அனை வரும் அங்கிருந்து வெளியே செல்லாதவாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அண்மைக்காலமாக அப்பகுதியில் சிறிலங்காக் கடற்படையின் கெடுபிடி நடவடிக்கைகள் அதிகரிப்பதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

# மூதூரில் துப்பாக்கிச் சூடு முஸ்லிம் விவசாயி பலி; 2 பேர் காயம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் நேற்றுக் காலை முஸ்லிம் விவசாயிகள்மீது இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்

இந்தச் சம்பவம் பாலத்தோப்பூர் கிராமத்திலுள்ள வயல்வெளியொன்றில் நடந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.விவசாயிகள் மூவரும் தமது வயல் செய்கைக்காக அங்கு சென்றிருந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# வரலாற்றிற்கு மாறான வகையில் அரசு மீது நிபந்தனை விதிக்கப்பட்டது!

## புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்

(நமது நிருபர்)

உலக வரலாற்றில் விடுதலைக்குப் போராடுகிற இயக்கங்களுக்கு நிபந்தனை விதித்த நிலைமாறி முதன் முறையாக இலங்கையில் ஒடுக்கும் தரப்பாக உள்ள சிங்கள தேசத்துக்கு நேர்வே நிபந்தனைகளை விதித்திருக்கிறது என "புலிகளின் குரல்" வானொலியின் அரசியல் அரங்க நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,



தமிழீழம் என்கிற தமிழ் தேசம் மற்றும் சிறிலங்கா என்கிற சிங்கள தேசத்தினுடைய நிலைப்பாடுகள் தற்போது தெளிவாக சர்வதேசத்தின் முன்பாக வைக்கப்பட்டுள்ளது.

தலைவரின் மாவீரர் நாள் உரையை இனி ஒவ்வொரு நாளும் வரக்கூடிய செய்திக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ புலனாய்வுக் குழு மக்கள் பேருந்து மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

கதுருவெலவிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்றுகொண்டிருந்த பொது மக்களின் பேருந்தின் மீது இராணுவ புலனாய்வுக் குழுவினர் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் நான்கு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று மாலை 5.45 மணியளவில் மட்டக்களப்பு சந்திவெளிக்கு அண்மையில் உள்ள விநாயகர் வித்தியாலயத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி உறுப்பினர் திருமலையில் சுட்டுக்கொலை

(திருமலை)

திருகோணமலை மாவட்ட அலஸ் தோட்டப்பகுதியில் நேற்றுமாலை ஈ.பி.டி.பி. உறுப்பினரொருவர் வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்

கொல்லப்பட்டவர் மைக்கல்கொலின் (வயது-35) என அடையாளம் காணப்பட்டுள்ளார். தில்லை நகரிலுள்ள தனதுவீட்டிலிருந்து ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு உந்துருளியில் சென்று கொண்டிருந்த சமயம் மற்றுமொரு உந்துருளியில் எதிர்கொண்ட நபர்களினால் இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சமாதானப் பேச்சுவார்த்தையை யப்பானில் நடத்த தயாராகவுள்ளோம்

## யப்பான் சிறப்புத்தூதுவர் யகூசி அகாசி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆசிய நாடொன்றில் நடத்துவதற்கு இலங்கை அரசு தயாராக உள்ளது. இத்தகைய பேச்சுக்களை யப்பானில் நடத்துவதற்கு யப்பான் அரசு தயாரென இலங்கை வந்துள்ள யப்பான் சிறப்புத் தூதுவர் யகூசி அகாசி தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வாரகாலமாக இலங்கையில் தங்கிநின்று சனாதிபதி மற்றும், பல்வேறு அரசியல் கட்சிகள் ஆகியவற்றுடன் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் பற்றி விரிவான பேச்சுக்களை நடத்திய அகாசி நேற்று பத்திரிகையாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை இலங்கைக்கு வெளியில்நடத்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
இணையத்தளங்களை
உருவாக்கக்கூடிய
உயர்கற்கை நெறி

**Dream weaver MX**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகட்கு:
வின்நெற் கணனி பயிற்சி நிலையம்
டிப்போ வீதி, கிளிநொச்சி
(சி.13074)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக்கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும், பிள்ளையார் பொத்தகசாலை. கண்டிவீதி, கிளிநொச்சி.T.P.2285750 (சி.13263)

## தவறிவிட்டது

தர்மகுலசிங்கம் றொய்ஸ்ரன் என்பவரது தேசிய அடையாள அட்டையுடன் பேர்ஸ் ஒன்று முகமாலையில் இருந்து கிளிநொச்சி வந்த பேருந்தில் 1.12.2005அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப் படுகின்றார்கள்
(7079)

## தவறிவிட்டது

மகாலிங்கம் அமலராசா என்பவருடைய பாஸ் தேசிய அடையாள அட்டையும் புதுக்குடியிருப்பில் தவறவிடப்பட்டுள்ளது இதை கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். அரசம்மை பல்பொருள் வாணிபம் பொதுச்சந்தை புதுக்குடியிருப்பு
(6959)

# பாண்டியன் குளம் பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(மல்லாவி)

முல்லை. மாவட்ட பாண்டியன் குளம் பிரதேசத்தின் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு பாலிநகர் மகாவித்தியாலய மண்டபத்தில் பாண்டியன் குளம் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் சி. இலக்கியன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் பொதுச் சுடரினை முல்லை. மாவட்ட விளையாட்டு துறை பொறுப்பாளர் சீ. நிளான் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை தூயவன் அரசறிவியல் கல்லூரி பொறுப்பாளர் அ.பார்த்தீபன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து பொது நினைவுக் கல்லறைக்கான ஈகச்சுடரினை



துணுக்காய் பிரதேச கல்விக்கழக பொறுப்பாளர் வாதவூரன் ஏற்றி வைத்தார். மலர் மாலையினை பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் செ. முல்லை வீரன் மலர் மாலை அணிவிக்க. துணுக்காய் பிரதேச காவல்துறை பணிமனை துணைப் பொறுப்பாளர் மார்த்தாண்டன் மலர் வணக்கத்தை ஆரம்பித்து வைக்க. மலர் வணக்கம் அகவணக்கம் என்பன இடம் பெற்றன.

அரங்க நிகழ்வாக வரவேற்புரையை பாண்டியன்குளம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சி. சண்முகலிங்கம் ஆற்ற, நினைவுரையை தூயவன் அரசறிவியல் கல்லூரி பொறுப்பாளர் அ. பார்த்தீபன் ஆற்ற சிறப்புரையை முல்லை. மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் செ. முகுந்தன் ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து மாவீரர் பெற்றோருக்கான கௌரவிப்பு நிகழ்வில் நினைவுப் பரிசில்களை மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மரியதாசன் ஜெகு. தூயவன் அரசறிவியல் கல்லூரி பொறுப்பாளர்அ. பார்த்தீபன், ஈழநாதம் பத்திரிகை நிறுவன பணிப்பாளர், முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. புனிதன் ஆகியோருடன் பெண் போராளிகளும் வழங்கினர். நன்றியுரையை முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அ.தணிநாயகம் ஆற்றினார். இந் நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பாண்டியன் குளம் துணுக்காய் அபிவிருத்தி கழகம், தமிழீழ நிர்வாக சேவை முல்லை கிளைச் செயலகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், சமூக மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் பணியாளர்கள். பொறுப்பாளர்கள் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

# கேள்விப் பத்திர அறிவித்தல்

சேவாலங்கா மன்றம் ஒரு தேசிய அரச சார்பற்ற நிறுவனமாகக் கடந்த 14 வருடங்களாக தகுதிகாண் வறிய மக்களுக்கும், மற்றும் நாட்டிலுள்ள இயற்கை அனர்த்தம் அல்லது இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஐரோப்பிய சமூக மனிதாபிமான உதவித் திட்டத்தின் (ECHO) நிதி உதவியுடன் ஜேர்மன் அக்றோ அக்சன் நிறுவனத்தின் (GAA) ஒத்துழைப்புடனுன் சேவை செய்கின்றது.

முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரம் கீழ்வரும் வழங்கல்களுக்கு மார்கழி 21 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை கோரப்பட்டு, உடனடியாகக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

அத்தருணத்தில் கேள்வி கோருபவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி அது நடைபெறும் போது சமு[illegible]ளிக்க வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் பொருட்களுக்கும் தேவையான கேள்விப் பத்திரங்களைக் கீழ்க்காணும் நிலையங்களில் பணத்தை கொடுத்து காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 4.30 மணிவரை கிழமை நாட்களில் டிசம்பர் 12 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 20 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளமுடியும்.

| | |
|---|---|
| 01 | சேவாலங்கா பிராந்திய அலுவலகம், கண்டி வீதி, பரந்தன் |
| 02 | பணிப்பாளர்கள் கள அலுவலகம், சேவாலங்கா மன்றம்,51 வைரவர் கோவில் வீதி, வவுனியா |
| 03 | சேவாலங்கா மாவட்ட அலுவலகம், இல 250, கோவில் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். |
| 04 | சேவாலங்கா மாவட்ட அலுவலகம், இல 268/1, மத்திய வீதி, திருகோணமலை. |
| 05 | சேவாலங்கா மாவட்ட அலுவலகம், இல 64, மூர்வீதி, மன்னார். |

இத்திட்டத்தில் கூறப்பட்ட பொருட்களின் அளவு கீழ்வருமாறு:-

| | | |
|---|---|---|
| மரக்கறி விதைகள் (20g பை) | புடோலங்காய், வெண்டிக்காய், முட்டைக்கோவா , கறிமிளகாய், கத்தரி, சிறகு அவரை, கீரை ஒவ்வொன்றும் 471 பைகள் | ரூ.250.00 |
| நெல் | 832 புசல் | ரூ.250.00 |
| உரம் | V1, யூரியா, ரீ.டீ.எம் 20.800 கிலோ | ரூ.500.00 |
| கிருமிநாசினி | நொமினி (0.1 லீற்) 42 போத்தல் | ரூ.250.00 |
| நீண்டகாலப் பயிர்கள் | தென்னை 2355 தனி, மா, பலா-ஒவ்வொன்றும் 492 தனி, கறிமுருங்கை, கோவா, தேசி ஒவ்வொன்றும் 471 தனி | ரூ.250.00 |
| விவசாய உபகரணங்கள் | மண்வெட்டி, குப்பைவாரி ஒவ்வொன்றும் 832 தனி காட்டுக்கத்தி, கோடரி, அலவாங்கு-ஒவ்வொன்றும் 416 தனி, தெளிகருவி-84 தனி, அரிவாள் 1248 தனி | ரூ.500.00 |
| சீமெந்து பை(50 கி.பை) | 14157 பை | ரூ500.00 |
| கிடுகு | 158150 சோடி | ரூ.250.00 |
| மெற்றோ சீற் | 6896 தனி | ரூ.250.00 |
| 1/4' ஓம். எம் றொட்ஸ் | 14330.75சட்டம் (bar) | ரூ.250.00 |
| கல் | 3/4'-265.75 கியூப், 1'11/2'-10.75 கியூப் | ரூ.250.00 |
| மண் | மணல் 246 கியூப். கட்டடமணல் 686.5 கியூப் | ரூ.250.00 |
| நிலையுடனான கதவு | 657 தனி | ரூ.250.00 |
| சமையல் பாத்திரங்கள் | 12' அலுமினியம் பானை, 10 லீற். பிளாஸ்ரிக்வாளி 6'X4' இந்தியன்பாய் ஒவ்வொன்றும் 471 தனி, லாம்பு-942 தனி, 10' அலுமினியம்சோஸ்பான், 8 செ.மீற். சில்வர்கப், 22 செ.மீற் சில்வர்பிளேற் ஒவ்வொன்றும் 2355 தனி. | ரூ.500.00 |
| கழிப்பறைக் கோப்பை | 226 தனி | ரூ.500.00 |

இப் பொருட்கள் கிளிநொச்சி. மாவட்ட சேவா லங்கா மன்ற தளங்களுக்கு பாரம் கொடுத்தல் வேண்டும்.
தயாரிக்கப்பட்ட கேள்விகள் கொடுக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாக நிர்ணயிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தில் பதிவுத் தபாலில் கீழ்க் காணும் விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

01 தலைவர்,
கேள்விப்பத்திர சபை,
பிராந்திய அலுவலகம்,
சேவா லங்கா மன்றம்
யாழ். வீதி, பரந்தன்

மேற் கூறிய சேவாலங்கா மன்ற பிராந்திய அலுவலகம் கணக்காளர் அலுவலகத்தில் 22ஆம் திகதி மார்கழி 2005 அன்று பி.ப 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வண்ணம் அனுப்பவும்.
இத்திகதிக்குப் பின் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

செயலாளர்,
கேள்விப்பத்திர சபை,
பிராந்திய அலுவலகம்,
சேவா லங்கா மன்றம்
யாழ். வீதி., பரந்தன்.
(சி.13450)

# சிறந்த 100 பயனாளிகளுக்கு உணவுப் பொருள் வழங்கல்

(மல்லாவி)

முல்லை. மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் சுய தொழில் ஊக்கம கொண்ட சிறந்த 100 பயனாளிகளுக்கு உலக உணவு திட்டத்தின் கீழ் உலருணவுப் பொருட்கள் வழங்கிய நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை துணுக்காய் ப.நோ.கூ சங்க தலைமைச் செயலகத்தில் பொது முகாமையாளர் ந. தங்கராசா தலைமையில் இடம் பெற்றது.
தேறாங்கண்டல் பகுதியில் நேஸ் திட்டத்தின் மூலம் 25 வீட்டு திட்டத்தின் ஊக்கம் கொண்ட சிறந்த முறையில் உழைத்த பயனாளிகளுக்கு மா, சீனி, பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் வழங்கப் பட்டன. (24)

# மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு த.பு. கழகம் உணவுப் பொருள் வழங்கல்

(மல்லாவி)

முல்லை. மாவட்ட பாண்டியன் குளம், துணுக்காய் பிரதேசத்தில் அண்மைகாலமாக பெய்து வரும் கன மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு டி.ஆர்.சி, போரூட் நிறுவனங்களின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்காளிகளான சமூக மேம்பாட்டு நிறுவனம், பாண்டியன் குளம் துணுக்காய் அபிவிருத்தி கழகத்தினால் உணவல்லாத பொருட்களை வழங்கி வருகின்றனர்.

அனிஞ்சியன் குளம் கிராம சேவையாளர் பிரிவில் நேற்று 583 குடும்பங்களுக்கு வாளி, மெத்தை விரிப்பு, சவர்க்காரம், பொலித்தீன்கள் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டன. இது போன்று பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவின் ஒட்டறுத்த குளம் பகுதியில் 70 குடும்பத்திற்கும் வடகாடு கிராமத்தில் 80 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டன. (24)

# 1250 குடும்பங்களுக்கு சர்.செஞ்சிலுவைச் சங்கம் உதவி

(மல்லாவி)

முல்லை. மாவட்ட பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேசங்களில் அண்மையில் பெய்த தொடர்கனமழையினால் பாதிக்கப்பட்ட 1250 குடும்ப[illegible] சர்வதேச செஞ்சிலுவைச் சங்[illegible]னரால் உணவல்லாத பொருட்கள் [illegible]ழங்கப்பட்டுள்ளன.
இதன் போது பத்துக் கிராமங்களுக்கு இப் பொதிகள் வழங்கப்பட்டன. யோகபுரம் [illegible]ந்த, மல்லாவி, திருநகர் தேறாங்கண்டல்,புத்துவெட்டுவான் ஆலங்குளம், உயிலங்குளம், தென்னியன்குளம்,பழைய முறிகண்டி, ஐயன் கன்குளம், பகுதிகளைச் சேர்ந்த 1250 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
இருப்பினும் துணுக்காய் பிரதேசத்தில் பாதிப்பிற்குள்ளான ஏழு கிராமங்களிற்கு இப் பொருட்கள் வழங்கப் படவில்லை. கல்விளான் அம்பலப் பெருமாள் அமைதிபுரம், யோகபுரம், மத்தியபுகழேந்திநகர், யோகபுரம் கிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளில் 967 குடும்பங்கள் பாதிப்படைந்தன. இவர்களுக்கு இப்பொருட்களை வழங்குவதற்கு துணுக்காய்ப் பிரதே செயலர் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றார்.
(24)

# லண்டன் எண்ணெய் கிடங்கில் தொடர் வெடிப்புக்கள்

## -36 பேர் காயம் கட்டடங்கள் பல சேதம்

[லண்டன்]

**வடக்கு லண்டனிலுள்ள எண்ணெய்க்கிடங்கில் நேற்று அடுத்தடுத்து நிகழ்ந்த வெடிப்புக்களால் எண்ணெய்க்கிடங்குகள் சுவாலை விட்டு பற்றி எரிகிறது. கட்டடங்கள் பல சேதமாகியுள்ளன.**

லண்டனின் வடக்குப் பகுதியில் ஹெர்ட்போர்டுஷெயர் நகர் உள்ளது. இங்கு மிகப்பெரிய பன்ஸ்பீல்டு எண்ணெய்க் கிணறு உள்ளது. இதன் அருகில்லுயுட்டன் விமான நிலையம் மற்றும் முக்கியசாலை உள்ளன.

மிகவும் முக்கியமான இடத்தில் உள்ள இந்த எண்ணெய்க் கிடங்கில் காலை 11.30 மணிக்கு (இங்கிலாந்து நேரம் காலை 6.30 மணி)முதல் தொடர்ச்சியாக பல வெடிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இதனால் எண்ணெய்க்கிணறு தீப்பற்றி எரிந்தது. அறுபது அடி உயரத்திற்கு மஞ்சள் நிறத்தில் தீச்சுவாலை எழுந்தது. எங்கும் ஒரே புகை மூட்டமாகக் காணப்பட்டது.

இதனால் ஹெர்ட்போர்டு ஷெயர் நகரில் பல வீடுகள் மற்றும் கட்டடங்கள் சேதமாகியுள்ளன. இந்த நகரின் அருகேயுள்ள செயிண்ட் ஆல்பன்ஸ் நகிலும்இந்த அனர்த்தத்தினால் பாதிப்பு ஏற்பட்டது. வெடித்த சத்தம் முப்பது கிலோமீற்றர் தூரம் வரை கேட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெடிப்பு நடந்ததை அறிந்ததும் சம்பவ இடத்திற்குப் பொலிசார் விரைந்தனர். தீயணைப்புப்படையினர் விரைந்து சென்று எண்ணெய்க் கிடங்கில் பற்றிய தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இது அல்ஹைறதா தீவிரவாதிகளின் தாக்குதலாக இருக்கலாமென்று பொலிசார் சந்தேகிக்கிறார்கள். இப்பகுதியிலிருந்து யாரும் தப்பித்துச் செல்ல முடியாத அளவிற்கு நகரின் அனைத்து வழிகளும் மூடப்பட்டன.

இங்கிலாந்து முழுவதும் பொலிசார் உசார்படுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தபட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாகவும், இதன் பின்னரே இது தீவிரவாதிகளின் தாக்குதலா அன்றி விபத்தா என்பது குறித்து முடிவெடுக்க முடியும் என்றும் லண்டன் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

லண்டனில் கடந்த யூலை மாதம் ஏழாந்திகதி அல்ஹைறதா தீவிர வாதிகள் அடுத்தடுத்து பல இடங் களில் வெடிகுண்டுத்தாக்குதல் நடத்தினார்கள். இதில் பலர் பலியாகியிருந்தமை தெரிந்ததே.



# யப்பானில் பள்ளி மாணவியை குத்திக்கொன்றார் ஆசிரியர்

(டோக்கியோ)

யப்பானில் ஆறாம் வகுப்பு படிக்கும் மாணவி ஒருவர் ஆசிரியரால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். கடந்த ஒரு மாதத்தில் மூன்று பள்ளி மாணவிகள் கொலை செய்யப்பட்டுள்ளமை யப்பான் மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

யப்பானில் கொயெட்டோ என்ற இடத்தில் உள்ள பள்ளி ஒன்றில் ஆறாம் வகுப்பு படித்த மாணவி சயனோ கொரிமோட்டோ (வயது - 12). இவரை பள்ளியில் ஆசிரியராக பணியாற்றும் யு ஹாகினோ என்பவர் சமயலறையில் பயன்படுத்தும் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார். இது தொடர்பாக பொலிசார் அவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

### -பறவைக் காய்ச்சல் அபாயம்-

# 19 ஆயிரம் கோழிகளை புதைக்க யப்பான் முடிவு

(டோக்கியோ)

பறவைக்காய்ச்சல் பீதியால் பத்தொன்பதாயிரம் கோழிகளை வெட்டிப் புதைக்க யப்பான் நாட்டு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

யப்பானின் இபராக்கி மாகாணத்தில் கோழிப்பண்ணை ஒன்று உள்ளது.

இங்கு வளர்க்கப்படும் கோழிகளில் சோதனை மேற்கொண்டபோது பத்தொன்பதாயிரம் கோழிகளுக்கு பறவைக் காய்ச்சலுக்குரிய வைரஸ்க்கான அறிகுறிகள் இருப்பது தெரியவந்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் ஆசியாவில் எழுபது பேரை பலி கொண்ட பறவைக்காய்ச்சலுக்குரிய எச். 5.என். 1 வைரஸ் இந்தக் கோழிகளைத் தாக்கவில்லை என்றாலும் அதைவிட குறைந்த வீரியம் கொண்ட எச்.5. என்.2 என்ற வைரஸ் இக் கோழிகளைத் தாக்கியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. கோழிகளுக்கு பறவைக்காய்ச்சல் இருப்பது பற்றி நேற்று முன்தினம் தான் அதிகாரிகளுக்குத் தெரியவந்தது.

எனவே பறவைக்காய்ச்சல் தாக்கிய கோழிகளை வெட்டிப்புதைக்க உத்தரவிட்டுள்ளது என்று இபராக்கி மாகாண கால்நடைத்துறை அதிகாரி நொபுகிட்டோ குரியாமா தெரிவித்தார்.

பறவைக்காய்ச்சல் மனிதர்களை எளிதில் தாக்காது என்றாலும் பறவைகளின் மூலமாகத்தான் இந்த நோய் மனிதர்களைத் தாக்குகிறது. தற்போது இந்நோய் ஆசியாவின் சில பகுதிகளில் கோழிகளைத் தாக்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கோழிகளைத்தாக்கியுள்ள இந்த வைரஸ் பரவி மனிதர்களையும் தாக்கி உலகில் ஏராளமானவர்களைப் பலியெடுப்பதோடு பெரும் பொருளாதார நஷ்டத்தையும் உண்டாக்கலாம் என்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

### நீராவி தொடருந்து இயந்திரங்கள் பாவிப்பதை நிறுத்துகிறது சீனா

(பீஜிங்)

சீனாவில் இருநூறு ஆண்டு பழமை வாய்ந்த நீராவி தொடருந்து இயந்திரங்களின் பயன்பாட்டை அந்நாட்டு அரசு நிறுத்தியுள்ளது.

சீனாவில் இயங்கும் தொடருந்துகளில் 27 நீராவி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

இவை இருநூறு ஆண்டு பழமை வாய்ந்தவை. இவற்றின் பயன்பாட்டை நிறுத்த சீன அரசு முடிவு செய்ததால் நேற்று முன்தினத்துடன் இவை நிறுத்தி வைக்கப்பட்டன.

சீனாவில் கடைசியாக தொடருந்து இயந்திரம் 1986 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. பயன்படுத்தப்படாத தொடருந்து இயந்திரங்களை சுற்றுலாத்துறையிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



*மலேசியாவிலுள்ள லங்காவி தீவில் சர்வதேச விமானக்கண் காட்சி நடக்கிறது. ரஷ்யா,இத்தாலி,பிரான்ஸ் உள்ளிட்ட பல நாட்டு போர் விமானங்கள் இந்தக் கண்காட்சியில் பங்கேற்றுள்ளன.*

# நைஜீரிய விமானம் வெடித்து சிதறியது 75 மாணவர்கள் உட்பட 110 பயணிகள் பலி

(லாவோஸ்)

நைஜீரிய நாட்டைச் சேர்ந்த பயணிகள் விமானம் தரையில் மோதி வெடித்துச் சிதறியதில் 110 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

நைஜீரிய நாட்டைச் சேர்ந்த பயணிகள் விமானம் அபுஜா என்ற இடத்திலிருந்து புறப்பட்டுச்சென் றது. இந்த விமானத்தில் 75 மாண வர்கள் உட்பட 110 பயணிகள் இருந்தனர். இந்த விமானம் ஹாகோர்ட் நகரில் தரை இறங்கியபோது தரையில் மோதி வெடித்துச் சிதறியது.

அப்போது விமானம் தீப்பிடித்து எரிந்தது. இந்த விமானத்தில் பயணம் செய்த 75 மாணவர்கள் உட்பட 110க்கும் மேற்பட்டோர் உடல்கருகிப் பலியாகினர். நான்கு பணியாளர் மட்டுமே உயிர்பிழைத்ததாக தெரிகிறது. காலநிலை சீரின்மையால் ஓடுபாதையை விட்டு விலகி தரையில் மோதி வெடித்துச்சிதறியுள்ளதாக நைஜீரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த விமானம் 20 வருட பழமை வாய்ந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒக்ரோபர் மாதம் நைஜீரியாவில் உள்ள லாவோஸ் நகரில் இருந்து புறப்பட்ட விமானம் விபத்துக்குள்ளாகியதில் 117 பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா பணயக்கைதிகளின் தலை தப்புமா?

### -தீவிரவாதிகளின் 'கெடு' முடிந்தது

(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்ட அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா நாடுகளைச்சேர்ந்த நான்கு பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு தீவிரவாதிகள் விதித்த காலக்கெடு முடிவடைந்த நிலையில் பணயக்கைதிகளின் நிலை என்ன என்பது குறித்து தெரியாத நிலையில் உறவினர்கள் உருக்கமான வேண்டுகோள்களை விடுத்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு பாக்தாத் நகரில் மறுசீரமைப்புப் பணிகள் மற்றும் சமூக சேவைகளில் ஈடுபட்ட நான்கு வெளிநாட்டவர்களை தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் கடத்திச்சென்றனர். இவர்களில் இரண்டு பேர் அமெரிக்காவைச்சேர்ந்தவர்கள். ஒருவர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். இன்னொருவர் கனடாவைச் சேர்ந்தவர்.

அந்த நான்கு பேரையும் விடுதலை செய்ய வேண்டுமானால் ஈராக்கில் இருந்து வெளிநாட்டு படையினரும் மற்ற அமைப்பினரும் உடனடியாக வெளியேற வேண்டும் என்று கெடுவிதித்தனர்.

கோடிக்கணக்கில் பணயத் தொகையையும் கேட்டனர்.

தீவிரவாதிகள் விதித்த 'கெடு' நேற்று முன்தினத்துடன் முடிந்தது. இதை தொடர்ந்து அந்த நான்கு பேர் கதிஎன்ன? அவர்கள் தலை துண்டித்து கொலை செய்யப்பட்டார்களா? என்ற எந்தத் தகவலையும் தீவிரவாதிகள் தெரிவிக்கவில்லை.

பணயக்கைதிகளை விடுதலை செய்யுமாறு அவர்களது உறவினர்கள் தொடர்ந்து தீவிரவாதிகளுக்கு வேண்டுகோள் விடுத்த வண்ணமுள்ளனர்.


இந்த நிலையில் தீவிரவாதிகள் கடந்த சில நாட்களுக்கு முன்பு கடத்திச்சென்ற எகிப்து நாட்டு பயணியை தலை துண்டித்து கொலை செயதனர். சதாம் ஹுசைனின் சொந்த ஊரான திக்ரித் அருகே முகமது இக்ராகிம் அல் ஹிலாலி என்ற அந்த 46வயது எகிப்தியரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் அமெரிக்கர் ஒருவரையும் சுட்டுக்கொன்றனர்.

# 16 ஆவது ஆசியான் உச்சி மாநாடு


(கோலாலம்பூர்)

16ஆவது ஆசியான் உச்சிமாநாடு கோலாலம்பூரில் இன்று தொடங்குகிறது.

தெற்காசியப்பிராந்தியத்தில் மக்கள் பொருளாதாரீதியில் பலம் பெற இந்த உச்சிமாநாடு வழிவகுக்கும் என்ற எதிர் பார்ப்புகளுக்கிடையே இந்த உச்சிமாநாடு நடைபெறுகின்றது.



*ஜேர்மனியின் முனிச்நகர மிருகக்காட்சி சாலையில் உள்ள இந்த யானை கால்பந்து உள்ளிட்ட மனிதர்கள் விளையாடும் விளையாட்டை அங்குள்ள ஊழியர்களுடன் விளையாடி பார்வையாளர்களைக் கவர்ந்து வருகிறது.*





பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிராக வவுனியாவில் நடைபெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டத்தைப் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு:- ஆறு:சுபாஸ்கரன்)

## கற்சிலைமடு திலீபன் மருத்துவமனையில் இருதய நோய்க்கான சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் இருதய நோய்க்கான சிகிச்சை ஒன்று நடைபெறவுள்ளது.

வெளிநாட்டிலிருந்து வருகை தரும் இருதய நோய்ச் சிகிச்சை நிபுணரால் கற்சிலைமடு தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் இருதய நோய்க்கான சிகிச்சையும் ஆலோசனைகளும் வழங்கவிருப்பதால் பயன்பெறுவோர் நாளை காலை 10.00 மணிதொடக்கம் மதியம் 2.00 மணிவரை வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (தீ.கு)

## ம.உ. தினத்தை சிறப்பிக்க உடையார்கட்டில் நிகழ்வுகள்

(உடையார்கட்டு)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு செடோ நிறுவனமும் டெனிஸ் அகதிகள் பேரவை நிறுவனமும் இணைந்து உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் சிறப்பு நிகழ்வுகளை கடந்த வெள்ளிக்கிழமை நடத்தியது.

இந்நிகழ்விற்கான மங்கல விளக்கினை டெனிஸ் அகதிகள் பேரவை நிறுவனத்தைச் சேர்ந்த சௌத்திரி, செடோ நிறுவன இணைப்பாளர் யூட் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இங்கு கருத்துரை வழங்குகையில், டெனிஸ் அகதிகள் பேரவை நிறுவனத்தைச் சேர்ந்த சௌத்திரி மனித உரிமைகள் பேணப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்த, சிறப்புரையில் உடையார்கட்டு மகாவித்தியாலய அதிபர் ராஜா மனித உரிமைகளில் சிறுவர் உரிமைகள் பற்றி விளக்கினார்.

இங்கு கலை நிகழ்வுகளாக விசுவமடு, உடையார்கட்டு ஆகிய பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் கும்மி, செம்பு நடனம், காவடி, கரகாட்டம், கோலாட்டம், பரதநாட்டியம் என்பன இடம்பெற்றன. அதே வேளை நிகழ்வில் கலந்திருந்த அனைத்து சிறார்களுக்கும் பரிசு வழங்கப்பட்டன. (19)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

சுப்பிரமணியம் சுவாஷினி தற்போதைய வதிவிடம் 07ஆம் யூனிற் இராமநாதபுரம் என்ற விலாசத்தையுடைய (736332604V) அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் பெற்றுக்கொள்ளவும். (கு)

## மட்டு. அப்பாவிப் பெண்கள் படுகொலைக்கு முல்லை மாவட்ட பெண்கள் அமைப்புக் கண்டனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை இரு அப்பாவிப் பெண்களை பலியெடுத்த தேசத்துரோகிகளின் கொலைக்கு முல்லை மாவட்ட பெண்கள் அமைப்புக் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மட்டக்களப்பில் சிறிலங்கா அரசாங்கத்தின் இராணுவப் புலனாய்வுப் பிரிவினதும், இராணுவ ஒட்டுப்படைகளினதும் கொடூர வெறியாட்டம் இரண்டு அப்பாவிப் பெண்களின் உயிர்களைப் பலியெடுத்துள்ளது. ஆண்டாண்டு காலமாக தமிழினம் எதிர்கொண்ட எத்தனையோ படுகொலைச் சம்பவங்கள் உண்டு. எனினும் சமாதான காலமென அனைவராலும் கூறப்படுகின்ற இக்காலப்பகுதியில் நடைபெற்ற இந்தக் கோரக்கொலைச் சம்பவங்கள் அனைவரின் நெஞ்சுகளிலும் ஆறாத சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு பல காரணங்கள் உண்டு.

நான்கு மாதக் குழந்தை தாய்முகத்தைத் தேடுகிறது, பச்சிளம் குழந்தை தாய்ப்பாலின்றி தவிக்கிறது, ஒன்றுமறியாத இரண்டுவயதுச் சிறுவன் ஆபத்தான நிலையில் துடிக்கிறான்.

இத்தனைக்கும் காலாக இருந்த அரச புலனாய்வுத் துறையை யும், அரச கூலிப்படைகளையும் முல்லை மாவட்ட மகளிர் அமைப்பினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சிறுவர் பாதுகாப்பு,சிறுவர் நலனோம்பல்,பெண்கள் பாதுகாப்பு, பெண்ணுரிமை என்றெல்லாம் பேசும் சர்வதேச பொது அமைப்புக்களுக்கு இந்தக்கோரம் தெரியவில்லையா? தவிக்கும் குழந்தைகளின் ஓலம் கேட்கவில்லையா? கொலை செய்தவர் அரச படை என்பதாலா? அல்லது கொல்லப்பட்டவர்கள் தமிழ்மக்கள் என்பதாலா? அதனைக் கண்டிப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் எவரும் முன்வரவில்லை.

வாயினிக்கச் சமாதானம் என்ற சொல்லை உச்சரிப்பதால் மட்டும் சமாதானம் வந்து விடப்போவதில்லை. சமாதானத்தைக் கட்டி எழுப்புவதற்கான சூழலை ஏற்படுத்துவதே முக்கியமானது. அதற்கு மாறாக எங்கள் மண்ணில் நடந்தேறிவரும் அவலங்கள் நீதி, நியாயங்களுக்கு அப்பாற்பட்டதாகவே உள்ளது. சிறுவர்களும்,பெண்களும் பேரினவாத இராணுவ இயந்திரத்தினால் அநியாயமாக வதைக்கப்படும்போதும், கொல்லப்படும் போதும் தட்டிக்கேட்பவராக சர்வதேச சமூகம் மாறவேண்டும். இதுவே எங்கள் எதிர்பார்ப்பாகும்.குற்றவாளிகள் நீதிக்கான மேடையில் நிறுத்தப்படும் போதுதான் சிறுவர்களும், பெண்களும் உரிமையுடனும், பாதுகாப்புடனும் வாழுகின்ற சூழல் உருவாகும் என்பதை வலியுறுத்துகிறோம்.

சர்வதேச தொண்டர் நிறுவனங்களே! பெண்கள் உரிமைக்கு குரல்கொடுக்கும் அமைப்புக்களே!

உங்கள் அமைதி எதிரியின் செயல்களுக்கு ஊக்கம் கொடுப்பதாகவே அமையும். பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் எதிரான இவ் வன்முறையை முற்றாக கண்டிப்பதுடன் தமிழ் மக்கள்மீது படுகொலைகளை மேற்கொண்டுவரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்குச் சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம். இதன் மூலம் தான் தமிழ் மக்களின் பிரச்சினைகள் இதய சுத்தியுடன் அணுகப்படுகிறது என்பதில் நாம் நம்பிக்கை கொள்ள முடியும். எனவே சர்வதேச மனச்சாட்சியின் முன் இப்படுபாதகமான நிலையை முன்வைக்கிறோம்

## வேளாண் செய்கையாளரை ஊக்குவிக்க வவுனியா வடக்கில் வினாடிவினாப் போட்டிகள்

(அலுவலக செய்தியாளர்)

கனகராயன்குளம், நெடுங்கேணி பிரதேச வேளாண் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வினாடிவினாப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களமும், வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து கடந்தவாரம் மேற்படி போட்டியினை கனகராயன் குளத்து விவசாயிகளுக்கு விவசாயப் போதனாசிரியர் கட்சன் சரஸ்வதி தலைமையிலும், நெடுங்கேணி விவசாயிகளுக்கு விவசாயப் போதனாசிரியர் சூ.சிவதாஸ் தலைமையிலும் நடைபெற்றன.

வினாடிவினாப் போட்டிகளை வவுனியா மாவட்ட விவசாய உத்தியோகத்தர் த.கணேசலிங்கம் பாட விதான உத்தியோகத்தர் வெ.மகேந்திரன் ஆகியோர் நடாத்தினர்.

கருத்துரைகளை ஜினசேன கம்பனி சந்தைப்படுத்தல் முகாமையாளர் மஞ்சநாயக்க, வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவன முகாமையாளர் சி.புவனேஸ்வரன் ஆகியோர் வழங்கினர். வினாடிவினாப் போட்டிகளில் வெற்றியீட்டிய விவசாயிகளுக்கான பரிசில்களை வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் வே.விக்கினேஸ்வரன் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## நடமாடும் சேவை மூலம் நாளை காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலகக் காணி அலுவலகத்தினால் நடமாடும் சேவைகள் மூலம் கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட காணிகள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் நாளையதினம் இராமநாதபுரம், மாயவனூர், வட்டக்கச்சி, சிவிக்சென்ரர் ஆகிய கிராமமக்களுக்கான காணிக்கச்சேரியும், அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கையும், கரைச்சிப்பிரதேச செயலக இராமநாதபுரம் உபபணிமனையிலும், மற்றும் எதிர்வரும், 16ஆம் திகதியன்று உருத்திரபுரம் வடக்கு நீவில் கிராம மக்களுக்கான காணிக்கச்சேரியும், காணி அனுமதிப்பத்திரம் கையொப்பமிடும், நடவடிக்கைகளும், உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தில் வைத்தும், மேலும் எதிர்வரும் 20ஆம் திகதியன்று ஆனந்தபுரம் கிராம மக்களுக்காக காணிக்கச்சேரி ஆனந்தபுரம் கிராம அபி விருத்திச் சங்கத்திலுமான மூன்று இடங்களிலும், காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை மேற்படி நடவடிக்கைகள் இடம்பெறுமென கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகத்தத்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவி கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)



தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா வடக்கு நெடுங்கேணிக் கோட்டத்தில் சித்தியடைந்த ஒரேயொரு மாணவியான வவுனியா வடக்கு வேலன் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கோணேசமூர்த்தி டேனிகாவைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று கடந்த வியாழக்கிழமை வேலன்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

வேலன்குளம் அ.த.க.பாடசாலை அதிபர் திருமதி சி.நிரஞ்சனா சிவகுமார் தலைமையில் காலை 11.00 மணிக்கு ஆரம்பமான மேற்படி நிகழ்வு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.

வரவேற்புரை, தலைமையுரையினையடுத்து உரைகளை வவுனியா வடக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் மேகநாதன், கோட்டக்கல்வி அதிகாரி இந்திரராஜா, ஆசிரிய ஆலோசகர் லொறிஸ்ரன் ஆகியோர் ஆற்றினர். பெற்றோர்கள் சார்பில் மகேந்திரன் சீதா உரையாற்றினார். தொடர்ந்து சித்தியடைந்த மாணவிக்கு பரிசில்களையும் பணப் பரிசில்களையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

அத்துடன் கற்பித்த ஆசிரியர், மற்றும் தொண்டர் ஆசிரியர்கள் இருவருக்கும் மாணவி டேனிசா பரிசில்களை வழங்கினார்.

இப்பாராட்டு நிகழ்வில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அயல் பாடசாலை, அதிபர்கள்,கிராம அமைப்புக்களை சேர்ந்தோர் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

## கரைவலைத் தொழிலாளர்களுடன் முல்லையில் கலந்துரையாடல்

(முல்லை)

கரைவலைத் தொழிலாளர்களுக்கான சிறப்புக் கலந்துரையாடல் கடந்த ஐந்தாம் திகதி முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது.

சமாசத்தின் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 2004 ஆம் ஆண்டிலுள்ள நடைமுறையினைக் கடைப்பிடிக்கு மாறும் அதில் முக்கியமாக கரைவலைத் தொழில் செய்ய ஆரம்பிக்கும் திகதியும் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் கரைவலைத் தொழில் செய்யுமிடத்தை தெரிவுசெய்ய வேண்டுமென்றும் புதிய கரைவலைப்பாடு கோரியவர்கள் தொடர்பாகவும் இதனைக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் சுனாமி அனர்த்தத்தின் போது பிற இடங்களிலிருந்து கடலிற்குச் சென்ற மரக்கட்டைகளை அகற்றுவது தொடர்பாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன், சமாசத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர். (20)

## ஆற்று மீன்பிடி தொழிலாளருக்கு வீச்சு வலைகள் வழங்கல்

(முல்லை)

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட ஆற்றுத் தொழிலினை மேற்கொண்டுவரும் பயனாளிகளுக்கு முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கசமாசத்தினால் வீச்சுவலை வழங்கப்பட்டுவருகின்றது.

இதனடிப்படையில் 23 கிராமங்களிலுள்ள 1500 பயனாளிகளுக்கு முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் வைத்து நேற்று முன்தினம் காலை 8.00 மணிக்கு இவ் வீச்சுவலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தலைவர் மரியராசா,சமாசத்தின் செயலாளர்,சமாசத்தின் உப தலைவர், கெயார் நிறுவனப்பிரதிநிதிகள் ஆகியோர் வழங்கினார்கள். (20)



யாழ். குடாநாட்டை நேற்று முன்தினம் தாக்கிய பனூஸ் சூறாவளியால் ஏற்பட்ட சேதங்கள் சிலவற்றைப் படத்தில் காணலாம்.

(படம் 41)

## கிராமங்கள் தோறும் ஊரகமேம்பாட்டுபேரவை நிறுவுவதற்கு ஆலோசனை

வவுணதீவுப் பிரதேசத்தில் கிராமங்கள் தோறும் ஊரக மேம்பாட்டுப் பேரவையை நிறுவுவதற்கு கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் மட்தாண்டியடிப் பாடசாலை மண்டபத்தில் ஊரக மேம்பாட்டுப் பேரவையின் மாவட்ட இணைப்பாளர் க.அரிகரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன், வவுணதீவுப் பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், ஊரக மேம்பாட்டுப் பேரவையின் செயற்பாடு, அதன் வளர்ச்சி, பரிணாமம், தோற்றப்பாடு போன்ற விடயங்கள் உள்ளடக்கிய முறையில் கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

## பொலிசாரால் தேடப்பட்டவர் தூக்குப் போட்டு தற்கொலை

நீண்ட காலமாக ஏறாவூர் பொலிசாரினால் தேடப்பட்டு வந்த சந்தேக நபரான செங்கலடி சந்தை வீதியைச் சேர்ந்த கணேசன் ஜெயக்காந்தன் (வயது-19) என்பவர் தூக்குப் போட்டு தற்கொலை செய்துள்ளார்.

இவர் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமையினால் நீண்ட காலமாகப் பொலிசாரினால் தேடப்பட்டு வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தாக்குதல் நடத்துவோரை கண்டுபிடிக்க குடாநாட்டில் ஒருசில நாட்களில் பாரிய தேடுதல்

### பாதுகாப்பு தடுப்பை மேற்கோள் காட்டி சிங்கள ஊடகம் தகவல்

*(யாழ்ப்பாணம்)*

***யாழ். குடாவில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது தாக்குதல்களை நடாத்துபவர்களைக் கண்டு பிடிப்பதற்காக பாரிய தேடுதல் ஒன்றை நடாத்த படையதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இப்பாரிய சோதனை நடவடிக்கைகள் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளும், அதற்கு வெளியேயும் இன்னும் ஓரிரு நாட்களில் மேற்கொள்ளப்படலாம் என அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.***

அதியுயர் பாதுகாப்பு வலயங்களிற்குள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சாதுரியமாக உள்நுழைந்துள்ளதாகவும், சாம் ரக வானூர்தி எதிர்ப்பு ஏவுகணைகள் இரண்டு உட்பட பல கனரக ஆயுதங்களும், அவர்களால் உயர்பாதுகாப்பு வலயங்களிற்குள் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும், சிறிலங்கா உளவுப் பிரிவினர் வெளியிட்டுள்ள தகவல்களையடுத்தே இந்தத் தேடுதல்களை நடாத்த படைத்தலைமை தீர்மானித்துள்ளதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களிற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ள நிலையில், அதனை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மூலம் எழுத்து மூலம் பெற்றுக்கொண்டே இந்தத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள படைத்தரப்பு தீர்மானித்துள்ளது எனவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

# பெண்கள் மீதானவன்முறை தொடர்ந்தால் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் போராட்டம்

பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் தொடரும் பட்சத்தில் பெண்கள் தங்களுக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிவரும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் மேம்பாட்டிற்கும், பாதுகாப்பிற்குமான அமைப்பு நேற்றுக் கையளித்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வந்தாறுமூலை பலாச்சோலையில் இரு பெண்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து பட்டிப்பளை பிரதேச செயலாளரிடம் மனு கையளிக்கப்பட்டதுடன் மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் சர்வதேச சமூகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதான சூழலில் அரச ஆக்கிரமிப்புப் பகுதியான வந்தாறுமூலையில் கடந்த 07.12.2005 ஆம் திகதி அன்று இரவு 9.00 மணியளவில் எதுவுமே அறியாத அப்பாவிக் குடும்பப் பெண்களான திருமதி யோகராஜா யோகேஸ்வரி, திருமதி குகன் வதனி ஆகிய இருவரையும் இராணுவப் புனாய்வுத் துறையினரும் அவர்களோடு இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒட்டுப் படையினரும் மிகவும் கொடூரமான முறையிலும் ஆத்திரத்தை ஊட்டக்கூடிய வகையிலும் சுட்டுக்கொன்றுள்ளனர். இதனை மட்டக்களப்பு மாவட்டப் பெண்கள் மேம்பாட்டு அமைப்பினராகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமது குடும்ப மேம்பாட்டிற்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும் உழைத்துக் கொண்டிருக்கும் இவ்வாறான பெண்களைக் கொலை செய்வதன் ஊடாக எதையும் சாதிக்கமுடியாது. மாறாக தமிழ்மக்களின் மனங்களிலே ஆத்திர உணர்வைத் தோற்றுவித்து மக்கள் போராட்டங்களை விரைவுபடுத்துகின்ற ஒரு சூழ்நிலையையே உருவாக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கௌரவிப்பு விழா

வினாசியோடைப் பிரதேசத்தில் அண்மையில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்ற சிறிராமநாதன்-தயாநிதி, பாஸ்கரன்-கவிதா, இந்திரகும்ார்-மோகனாம்பிகை ஆகியோரும் தரம் 5 இல் 2005 ஆம் ஆண்டு 107 புள்ளிகளைப்பெற்ற கிளி வினாசியோடை அ.த.க பாடசாலை மாணவி கிருபாகரன் கிருசாந்தி ஆகியோர் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கப் பட்டனர்.

கிளி.வினாசியோடை அ.த.க. முதல்வர் திரு.செ. சிவசங்கர் தலைமையில் 10.12.2005 சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடை பெற்ற நிகழ்வில் பிரதமவிருந்தினராக அருட்திரு லியோ ஆம்ஸ்ரோஸ் பங்குத்தந்தை பூநகரி,அயல் பாடசாலை அதிபர்களும் கலந்துகொண்டனர். மேற்படி நிகழ்வு விநாயகர் கடற்றொழிலாளர் சங்க அனுசரணையில் கிராமஅபிவிருத்திச்சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புதியவெளிவாரி கலை,கலாச்சார பீட மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஒத்தி வைப்பு

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புதிய வெளிவாரி கலை, கலாசார பீட மாணவர்களுக்கான ஆரம்ப வகுப்புக்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சனியன்று கலைப்பீட புதிய மாணவர்களுக்கு நடைபெறவிருந்த ஆரம்ப வகுப்புக்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கலைப்பீடத்தின் இணைப்பாளர் வே.அழகரெட்ணம் தெரிவித்தார்.

புதிய மாணவர்களுக்கான புதிய வகுப்புக்கள் எதிர்வரும் பெப்ரவரி 11ஆம் திகதி இடம்பெறுமெனத் தெரிவித்த அவர் கிழக்கில் இடம்பெற்ற ஹர்த்தாலை அனுஷ்டிக்கும் முகமாகவே இவை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றார். எனினும் பழைய மாணவர்களுக்கு கலைப்பீட வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான வகுப்புக்கள் நேர அட்டவணையின்படி இடம்பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்



*பருத்தித்துறை இன்பருட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இடைத் தங்கல் முகாமில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பனூஸ் சூறாவளியை அடுத்து அங்கு சூழ்ந்துள்ள வெள்ள நீர்.*

*படம்:– காங்கேயன்)*

## மக்கள் குடியேற்றத்திற்கு மத்தியில் அமைக்கப்பட்ட கள்ளுத் தவறணை இனந்தெரியாதோரால் நாசம்

யாழ். உடுவில் பகுதியில் மக்கள் குடியேற்றத்திற்கு மத்தியில் அமைக்கப்பட்டிருந்த கள்ளுத் தவறணையை அகற்றுமாறு பல ஆண்டுகளாக அப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கைகள் எதுவும் கவனத்தில் எடுக்கப்படாத நிலையில் குறித்த தவறணை அடையாளம் தெரியாத நபர்களினால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக குறிப்பிட்ட இந்தக் கள்ளுத் தவறணையை அந்த இடத்தில் இருந்து அகற்றும்படி பலதடவைகள் உரிய சங்கத்திற்கும் மற்றும் உடுவில் பிரதேச செயலாளர் மதுவரித் திணைக்களம் எனப் பல இடங்களுக்கும் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதனை அகற்ற உரியவர்கள் நடவடிக்கையெடுக்காத நிலமையிலேயே ஆத்திர முற்றவர்களினால் இத்தவறணை அடித்துடைக்கப் பட்டதாகத் தெரியவருகின்றது.

சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அடுத்தகட்ட சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கும் அறிகுறி காணப்படுகிறது.

விடுதலைப்புலிகள் அரசு தங்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற குறுகியகால அவகாசத்தை வழங்கியிருப்பதுடன் அது தோல்வியுறும் பட்சத்தில் மீண்டும் ஒரு யுத்தத்துக்குச் செல்ல நேரிடலாம் என அறிவித்துள்ளது. இந்தக் காலக்கெடு தொடர்பில் தான் அலட்டிக் கொள்ளப் போவதில்லை என அரசு அறிவித்துள்ளது.

எனினும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பில் இரு தரப்பினரும் அதற்கான புத்திசாதுரியத்துடனும், ராஜதந்திர ரீதியாகவும் காய்களை நகர்த்த வேண்டியது அவசியமாகும் என்ற கருத்துப்படி ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய படிப்படியான ராஜதந்திரங்கள் எப்பட வேண்டும் எனத் தெரிவிக்கின்றார். இந்த பேச்சுக்கான இடம், நேரம் என்பன தெரிவிக்கப்படாவிட்டாலும் இந்த விடயம் பற்றி ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. இதன்மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றபோதும் அரசினதும், புலிகளினதும் கூட்டுக் கோரிக்கை காரணமாகவே நோர்வே இதற்கு தலைமையேற்றதேயொழிய நோர்வேயின் தேவைக்கல்ல.

அவர்களின் பணி தனித்து தமிழ் மக்களுக்கோ, சிங்களவர்களுக்கோ அல்ல. சிலர் அவர்களின் பணியைத் தவறாகப் புரிந்துள்ளனர். அவர்கள் தனிப்பட்ட கொள்கைகளுக்காக செயற்படுவதாகக் கூறுகிறார்கள். யுத்த நிறுத்தப் பணி விதிகளுக்கு அப்பால் செயற்படுவதாக தெரிவிக்கின்றனர். ஆனால் அவர்களை விமர்சிக்க யாருக்கும் அதிகாரம் கிடையாது.

அதனைப் பயன்படுத்தும் உரிமையை தமிழ் மக்களுக்கு வழங்குவதில் முக்கிய கவனம் எடுக்க வேண்டும். இதனை ஆட்சிக்கு வந்த எந்த அரசும் கவனம் எடுக்கவில்லை. தமிழ்ப் பகுதிகளில் எந்த ஒரு தமிழ் பேசும் பொலிசாரும் நியமிக்கப்படவில்லை.

தற்போது ஜே.வி.பி, ஹெல உறுமய அழுத்தம் கொடுத்தபோதும் ராஜபக்ஷ வடகிழக்கு மாகாணத்தைப் பிரிக்க முன்வரவில்லை. அதனை வர்த்தமானியில் அறிவித்துள்ளார் என்றாலும் கிழக்கு மாகாணத்தில் பல ஆயுதக் குழுக்கள் செயற்பட்டு பல கொலைகளைச் செய்வதை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும். இல்லாவிடில் அது சமாதான முன்னெடுப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகும். சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி, சமாதானத்துக்கான ஒரு சூழலை அரசு ஏற்படுத்த வேண்டும். அதே அரசு முன்வந்தது.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை பல நிர்மாணப் பணிகள் செய்யவேண்டியுள்ளது. ஒன்று யுத்தத்தால் அழிவுற்றவை. அடுத்தது சுனாமியால் ஏற்பட்ட அழிவுகள், அரசு உடனடியாக இதில் கவனம் எடுக்க வேண்டும். அங்கு பல இலட்சம் மக்கள் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். அவர்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். ஐ.தே கட்சியின் அணுகுமுறை விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச்சு நடத்துவதாக இருந்தது. ஆயினும் மகிந்த அனைத்துக் கட்சிகளுடனும் பேசி இதற்குத் தீர்வு காண வேண்டும் எனத் தெரிவிக்கிறார். அவர் ரணிலைப் போன்று இரு வேடம் போடவில்லை. அவர் தமக்கு அளிக்கப்பட்ட மக்கள் ஆணைப்படி செயற்படுவார். ஆகவே அவர் யுத்தம் ஒன்றுக்காக செல்லமுடியாது.

# சமாதானத்துக்கான சூழலை அரசே உருவாக்கவேண்டும்!

களும் கட்டுமாணங்களும் முன்னெடுக்கப்பட்டு பிரச்சினை தொடர்பான கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டு சமாதானம் எட்டப்பட வேண்டும்.

எனினும் இந்த சனாதிபதி பதவியேற்றதும் வழக்கமான நிலையிலிருந்து சற்று விலகிச் செல்வதுபோல் தெரிகிறது. முன்னர் சமாதான நடவடிக்கைகளில் மத்தியஸ்தப் பணிகளில் ஈடுபடும் நோர்வே விலகிச் செல்ல வேண்டும் எனக் கோரிய ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமய கட்சியினர் விடுத்த கோரிக்கையை சமாதான செயலகப் பணிப்பாளர் நிராகரித்திருப்பதுடன் அவர்கள் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் நோர்வே அரசும் தொடர்ந்து இப்பணியில் நிலைத்திருக்க வேண்டும் என அங்கு சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவும் மற்றும் நோர்வே அமைச்சர் எரிக்சூல்ஹெய்மும் விஜயம் செய்தபோது தெரிவித்திருந்ததை பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. அத்துடன் நோர்வே பலிக்கடாவாக இருக்கப் போவதில்லை என்றும் எரிக்சூல்ஹெய்ம் அங்கு குறிப்பிட்டார். தற்போது சிறிலங்கா அரசின் அழைப்புக்காக நோர்வே காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நோர்வே அரசு மீண்டும் மத்தியஸ்தப் பணியில் ஈடுபடும் போது சிறிலங்கா அரசு தனது விருப்பத்துக்கேற்ப அவர்களை ஆட்டிப் படைக்கக்கூடாது.

புதிய சனாதிபதி மகிந்த யுத்த நிறுத்தம் அமுலாக்கல் நிகழ்ச்சிநிரலில் படையினர் சம்பந்தமான விடயமும் சேர்த்துக்கொள்

இவ்வாறான நிலையில் அரசும், புலிகளும் யுத்தத்துக்கே முன்னுரிமையளித்து தயார்படுத்தலில் ஈடுபடுவதாகத் தெரிகிறது. எனினும் குறிப்பிடத்தக்களவு வன்முறைகள் தடுக்கப்பட்டுள்ளன. எதிர்காலப் பேச்சுக்களிலும் இவை பற்றி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்ததாக தமிழ் மொழியை தேசிய மொழியாக அங்கீகரித்து

போல் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையில் புரிந்துணர்வு பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும்.

ஐ.தே கட்சி உயர்மட்டங்களுக்கிடையில் பேச்சுக்களை நடத்தினாலும் வடக்கு கிழக்கில் வாழும் சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்த தவறிவிட்டது.

அடுத்ததாக வடக்கு கிழக்கில் சுனாமி பொதுக்கட்டமைப்பை வழங்க அரசு தவறிவிட்டது. இதற்குப் பதிலாக வேறு ஒரு புனரமைப்பு நிர்வாகத்தையளிக்க சந்திரிகா



நன்றி டெய்லிமிரர்

சமாதானம் என்பது இரு பகுதிகளுக்கிடையில் பேச்சுக்கள் நடைபெறுவது மட்டுமல்ல. அது நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதாக வேண்டும்.

குமார் ருபசிங்க
(டெய்லிமிரர்)
தமிழில். வடிவேல்

விடுதலைப்புலிகள் அரசினது நியாயமான பதிலையும், நிலைப்பாட்டையும் எதிர்பார்த்துள்ளனர். ஆயினும் மகிந்த தனது பிரேரணையை் வெளிப்படுத்தமாட்டார்போல் தெரிகிறது.

மகிந்த 13 ஆவது அரசியல் திருத்த சட்டத்தின்படி வடக்கு கிழக்குக்கு அதிகரித்த அதிகாரத்தை வழங்க இருப்பதாகத் தெரிகிறது. இது விடுதலைப்புலிகள் கோரிய இடைக்கால நிர்வாக சபைக்கு மாற்றீடாக இருக்கலாம்.

ஆயினும் விடுதலைப்புலிகள் அரசு நியாயமான பதிலைத் தராவிட்டால் மீண்டும் போரை ஆரம்பிக்கும் நிலைப்பாட்டில் உள்ளனர். எனினும் மகிந்த இந்தக் காலக்கெடுவுக்கு தனது அரசு பணியாது என்று தெரிவிக்கிறார். ஆகவே இரு பகுதியினரும் சண்டைக்குத் தயாராகுவது போன்றும், சமாதானத்துக்கு தயாராவது போலும் தெரிகிறது. ஆயினும் சீன அறிஞர் ஒருவர் கூறியது போல ஒரு அம்பு கூட எய்யாமல் யுத்தத்தை வெல்வது நன்று என்று கூறியது போன்று யுத்தம் வெல்லப்பட வேண்டும்.

# புதிதாக அமைக்கப்பட்ட நீர்ப்போக்கி குழாய்கள் சிலதினங்களில் சேதம்!

## - நீர்தேங்கியுள்ளதால் பலத்தசிரமம்

(அலுவலக செய்தியாளர்)

புதிதாக நீர்ப்போக்கி குழாய்கள் கொண்டு அமைக்கப்பட்ட பாலம் சில தினங்களில் உடைந்துள்ளது.

இது பரந்தன் பூநகரி வீதியில் ஏ-9 வீதியுடன் இணைப்பை ஏற்படுத்த அமைக்கப்பட்டதாகும்.

பூநகரி வீதியில் முன்னர் இருந்த பாலத்தை அகற்றி மேற்படி புதிய நீர்ப்போக்கிகளுடனான சிறியபாலம் அமைக்கப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



மேற்படி பாலம் உடைந்துள்ளமையினால் அதனூடாக நீர் வெளியேற முடியாமல் தேங்கியுள்ளது. இந்நீர் தேங்கிநிற்கும் பகுதி பரந்தன் பேருந்து தரிப்பு நிலையமாகும்.

இவற்றுடன் பரந்தன் சந்தியில் அமைந்துள்ள அனைத்து வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும்கழிவு நீர் ஓடும் வாய்க்கால் வெட்டப்பட்ட போதும்கூட நீர் தேங்கியுள்ளது. பொருத்தமற்ற முறையில் கழிவுநீர் வாய்க்கால் வெட்டப்பட்டதால் நீர் வழிந்தோடமுடியாமல் இருப்பதுடன் வர்த்தக நிலையத்தினர், பேருந்துப் பயணிகள் எனப்பலரும் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருவதைக் காணமுடிகின்றது. (கு.தீ)

# முல்லையின் அபிவிருத்திக்கு ஆய்வு

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் லண்டன் எஸ்எக்ஸ் என்ற நிறுவனப் பிரதிநிதிகள் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வருகைதந்து திட்டம் நடைமுறைப் படுத்துவதற்கான ஆராய்வுக் கலந்துரையாடல்களை முல்லைத்தீவில் நடாத்தி வருகின்றார்கள்

கடந்த எட்டாம் திகதி முல்லை மாவட்ட மீனவர்களுக்கான அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்காக முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கசமாசத்தலைவருடன் சந்திப்பு நடாத்தினார்கள். இதில் மீனவர்களின் தற்போதய நிலை, எதிர்காலத்தில் அவர்களின் முன்னேற்றப்பாதைக்கான திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதற்கு த.பு.க.சுனாமித்திட்டப் பணிப்பாளர் அமுதாப்.முல்லை மாவட்ட த.பு.க. பணிப்பாளர் மூர்த்தி, எஸ் எக்ஸ் நிறுவனப்பிரதிநிதி பால மகேந்திரம், வர்த்தக அபிவிருத்தி கிராமிய விவசாய பொருளாதார நிபுணர் பீற்றர்பியேர், இணைப்பாளர் நிமலராஜன்,பொறியலாளர் செல்வ ராஜசிங்கம் மற்றும் வைரவநாதன் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினர் ஆகியோர் வருகைதந்திருந்தனர். (20)

## அரச பணியாளர்களுக்கு ஈருருளி வழங்கல்

(முல்லை)

[illegible]லைத்தீவில் சுனாமியினால் பா[illegible] அரச திணைக்களப் பண[illegible]க்கு வேள்ட்விசன் நிறுவனத்[illegible]ருளிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்[illegible]ழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. தபால் அலுவலகத்தில் 25 பணியாளர்களில் 18 பேருக்கும் நிக்கொட் திட்டத்தின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கும் இந்த ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன. (20)




# 01.12.2005
# 07.12.2005

**01**

☐. ஸ்பெயினின் எதிர்க்கட்சித்தலைவர் மரிபானோரஜோல் பயணம் செய்த உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளாகியதில் எதிர்க்கட்சித்தலைவர் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினார்.

☐. பங்களாதேஷின் நீதிமன்ற வளாகத் திற்கருகில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் பொலிசார் உட்பட 25 பேர் பலி.

**02.**

☐. ஈராக்கின் பலூஜாவில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட அமெரிக்கப்படையினர் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 14 அமெரிக்க இராணுவத்தினர் பலி.



☐. அமெரிக்காவில் ஆயிரமாவது மரணதண்டனைக் கைதியான வார்ஜினியாவைச் சேர்ந்த ராபின்லோவிட்டிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதேவேளை இம்மரணதண்டனை விதிக்கப்படுவதற்கு எதிர்ப்புத்தெரிவித்து உலக நாடுகளின் 380 நகரங்களில் ஊர்வலம் நடத்தப்பட்டது.

☐. சிங்கப்பூருக்கு போதைப்பொருளை கடத்தி வந்ததாகக் கைது செய்யப்பட்ட அவுஸ்திரேலிய இளைஞருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

☐. மத்திய ஜேர்மனியின் ஹேல்பேஸ்டட் நகரிலுள்ள விடுதியொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒன்பது பேர் பலி, ஐந்து பேர் காயம்.

**03.**

☐. ஆப்கானிஸ்தானுடனான பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் அல்ஹைதா உயர்மட்டத் தளபதி ஹம்ஸாராபியா உட்பட ஆறுபேர் தங்களது வெடிகுண்டுகள் வெடித்ததில் உயிரிழந்துள்ளார்கள்.

☐. பாக்தாத்தின் வடபகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த ஈராக்கிய இராணுவம் மீது தீவிரவாதிகள் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் 19 இராணுவத்தினர் பலி; ஏழு பேர் காயம்.


**04.**

☐. இத்தாலியில் ஏற்பட்டுள்ள மழை மற்றும் பனிப்பொழிவு காரணமாக அங்கு இயல்பு நிலை பாதிப்பு.

☐. கஜகஸ்தான் மக்கள் சனாதிபதித் தேர்தலில் வாக்களித்தனர்.

☐. ரஷ்யாவின் சுசோவா எனுமிடத்திலுள்ள நீச்சல் தடாகமொன்றின் கூரை இடிந்து விழுந்ததில் 14 பேர் பலி.

☐. சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள ஹொங்கொங்கில் ஒரு முழுமையான சனநாயக அரசியலமைப்பை அறிமுகப்படுத்தப்பட வேண்டுமெனக் கோரி பல்லாயிரக் கணக்கானோர் பேரணி நடத்தினர்.



**05.**

☐. பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இடம்பெற்ற இரு குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஐந்து பேர் படுகாயம்.

☐. ஈராக்கிய முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனுக்கு எதிரான வழக்கு மூன்றாவது முறையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



☐. இஸ்ரேலிய கரையோரப் பிரதேச மொன்றில் பலஸ்தீன தற்கொலைப் போராளி ஒருவர் நடத்திய குண்டுத் தாக்குதலில் ஐந்து இஸ்ரேலியர்கள் பலி.

**06.**


☐. ஆபிரிக்க நாடுகளான கென்யா, ஹொங்கோ, புருண்டி உட்பட பலநாடுகளில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக பத்துப் பேர் உயிரிழந்தனர்; 100 பேர் காயம்.

☐. ஈரான் தலைநகர் தெஹ்ரானில் விமானமொன்றில் திடீரென ஏற்பட்ட கோளாறு காரணமாக விமானம் பத்து மாடிக் கட்டடப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளான தில் 130 பேர் பலி.100 பேர் காயம்.

☐. இந்திய மத்திய அமைச்சர் நட்வர்சிங் தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

**07.**

☐. டென்மார்க்நாட்டின் கோர்செர் கடற்கரை அருகே ஜமேக்கா நாட்டுச் சரக்குக் கப்பலும், லைபீரியா நாட்டுச் சரக்கு கப்பல் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. இதன்போது சேதமடைந்த ஜமேக்கா நாட்டுக் கப்பல் கடலில் மூழ்கியது. அக்கப்பலில் இருந்த 23 ஊழியர்களும் காப்பாற்றப் பட்டனர்.



# மனித உரிமைகள் சாசனத்தை மீறவேண்டாம்; சனாதிபதி மகிந்தவுக்கு மகஜர்

(கொழும்பு)

சர்வதேச மனித உரிமை சாசனத்தை மீறவேண்டாம் என அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நேற்று முன்தினம் சனாதிபதியிடம் மகஜர் ஒன்று வழங்கப் பட்டுள்ளது.

காணாமல் போனோரின் பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் அமைப்பு இந்த மகஜரை கையளித்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினம் நேற்றைமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டமை தெரிந்ததே.

இந்த வருடத்தின் தொனிப் பொருளாக நிம்மதியாக வாழ்வதற்கான உரிமைகளை உறுதி செய்வோம் என ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

இலங்கையில், நிம்மதியாக வாழும் உரிமை மறுக்கப்பட்ட மக்கள் இருப்பதாக அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

மனிதஉரிமை மீறல்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு துரிதமாக தண்டனை வழங்குதல், பலவந்தங்கள் காரணமாக காணாமல் போவதைத் தடுத்து நிறுத்துவது போன்ற விடயங்கள் உட்பட ஏழு விடயங்களைச் சுட்டிக்காட்டும் மகஜரே சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது (32)

# கட்டண அதிகரிப்பிற்கு மாணவர்களால் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளுக்கான கட்டணங்களை 15 சத வீதத்தால் அதிகரிக்க பல்லைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளதற்கு மாணவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

திறந்த பல்கலைக்கழகங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் மானியம் குறைக்கப்பட்டதை அடுத்தே இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் காரணத்திற்காக மாணவர்களிடம் இருந்து மேலதிகமாகப் பணம் அறவிடுவது அநீதியானது எனப் பல்கலைக் கழகங்களின் ஒன்றியம் விசனம் தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் சனாதிபதி மகிந்தராஜபக்ஷ தலையிட்டு மேலதிக அறவீட்டைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒன்றியம் வேண்டுகோள்விடுத்துள்ளது. (32)

# வாகனப் பிரச்சினை காரணமாக மகிந்த-சந்திரிகா மோதல்

சிறிலங்காவின் முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அளிக்கப்பட்டிருந்த வாகனங்களைப் பறிமுதல் செய்ய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சியில் இருவருக்கும் கடும் மோதல் ஏற் பட்டுள்ளது.

சனாதிபதி பதவியிலிருந்து விலகிச்சென்றுள்ள சந்திரிகாவுக்கு 260 ஊழியர்கள்,32 வாகனங்கள், நான்கு குண்டு துளைக்காத வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

சந்திரிகா சனாதிபதியாக இருந்தபோது அவரது செயலாளர், கூடுதல் செயலாளர் ஆகியோருக்கு இரு வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

சனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறி ஹொரகொல்லவில் உள்ள சந்திரிகா யப்பானிய தூதுவர் யசூசி அகாசியை சந்திக்க கொழும்பு வந்தார்.

கொழும்பு வந்த சந்திரிகாவிடம் அரசாங்கத்தின் இரு வாகனங்கள் பறிமுதல் செய்யப்படவுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த அவர்,மகிந்தவின் செயலாளர் லலித் வீர துங்கவைச் தொலைபேசியில் அழைத்து மிகக் கடுமையாகப் பேசியுள்ளார். பின்னர் மகிந்த ராஜபக்ஷ வையும் தொலைபேசியில் தொடர்புகொண்டு இது விடயமாகப் பேசியுள்ளார். கடைசியில் சந்திரிகா அலுவலகத்தில் அந்த இரு வாகனங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சந்திரிகாவுக்கும் மகிந்தவுக்கும் இடையேயான முறுகல் தொடர்ந்து இருப்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வருவதாகவும் அக்கட்சியினர் கவலை தெரிவித்துள்ளனர்.

## ஊர்காவல்படைச்சிப்பாய் சுட்டுக்கொலை

(கொழும்பு)

தெஹிவத்த பகுதியில் ஊர்காவல் படைச்சிப்பாய் ஒருவர் இனம் தெரியாதவர்களால், நேற்றுமுன் தினம் அதிகாலை 1.30 மணிக்கு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இந்த ஊர்காவல்படைச் சிப்பாய் தனது வீட்டில் இருக்கும்போதே அங்கு வருகை தந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டுத்தப்பிச் சென்றுள்ளதாக பொலிசாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (32)

# சர்வகட்சி பேச்சுவார்த்தைகள் அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படும்

## சனாதிபதி செயலகம் கூறுகின்றது

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு முன்னோடியாக மேற்கொள்ளப்படவுள்ள சர்வகட்சி பேச்சு வார்த்தைகளை எதிர்வரும் சனவரி மாதம் இரண்டாம் வாரத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக சனாதிபதி காரியாலய வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வகட்சி மாநாட்டிற்கு முன்னர் சனாதிபதி மகிந்தராஜபக்ஷ அரசாங்கம்மற்றும் எதிர்க்கட்சிகளுடன் தனித்தனியே முதல் சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளார். ஏற்கனவே ஜாதிக ஹெல உறுமய உட்பட பல கட்சிகளுடன் சனாதிபதி இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த இரு கட்சிகளுடனும் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகப்பற்றற்ற பேச்சுவார்த்தைகளின் போது இந்த இரு கட்சிகளும் சனாதிபதியின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

# விச மதுபானம் அருந்திய 10 பேர் பலி; 47 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

விசத்தன்மையுடன் மதுபானம் அருந்தி நோய்வாய்ப்பட்டதில் மாத்தறை குடாவ பிரதேசத்தைச் சேர்ந்த பத்துப் பேர் உயிரிழந்துள்ளனர்.மதுபானம் அருந்திய மற்றும் 47 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. 13 பேர் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குடாவ எனும்இடத்தில் இந்த மதுபானம் அருந்திய இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். ஏனையவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து உயிரிழந்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் குடாவை என்னுமிடத்தில் மதுபானம் விற்பனை செய்யும் நபரொருவரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

மதுபானம் விநியோகம் செய்வதாகவும் தன்னிடமிருந்து மதுபானம் பெற்றுச் சென்ற பெண்ணொருவர் அதில் எதனையோ கலந்து விற்பனை செய்துள்ளதாகவும், அந்தப் பெண்ணிடமிருந்து மதுபானம் வாங்கியவர்களே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட நபர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுள் கலால் திணைக்கள அதிகாரியொருவரும் இருப்பதாக அறிவிக்கப்பகிறது.

# பள்ளி முதல்வர் வேண்டுகை

நிதித்துறையால் நடாத்தப்பெறும் நிதி மேலாண்மைக் கல்லூரியின் முதல்வர் பணிநிலைக்குப் பொருத்தமான ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01) தகைமைகள்:-
1. ஓய்வுபெற்ற பள்ளி முதல்வர்.
2. ஓய்வுபெற்ற ஆசிரியர்.
3. ஓய்வுபெற்ற அரச ஆளுகை (நிர்வாக) அலுவலர்.
4. பட்டதாரி.

02) பட்டறிவு:- 10 ஆண்டுகளுக்குக் குறையாத ஆளுகைப்பட்டறிவு.

03) அகவை :- 40 தொடக்கம் 60 வரை.

04) வேண்டுகை முடிவு நாள்:-20.12.2005.

05) வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி :- பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

06) நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:-27.12.2005 காலை 09.00 மணி.

07) நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:- மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

08) நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் கல்வித்தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ்கள், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றின் படிவங்களுடன் வருகை தருக.

09) சம்பளம்:- முழுநேர முதல்வராக தெரிவு செய்யப்படுவோருக்கு தகைமைக்கும் பட்டறிவுக்கும் ஏற்ப 15,000 ரூபாவுக்குக் குறையாமல் வழங்கப்படும்

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை.

(சி.13437)

- கொழும்பை அண்மித்த பகுதியில் -

# இந்திய-சிறிலங்கா கடற்படை கூட்டு ரோந்து நடவடிக்கை

(கொழும்பு)

இந்தியாவும் சிறிலங்காவும் கொழும்புக்கு அண்மித்த பகுதிகளில் கூட்டு கடற்படை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

சட்டவிரோதமாக மக்களின் நடமாட்டத்தையும் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதையும் தடுப்பதற்கான இந்தக்கூட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நடவடிக்கைகளில் இரண்டு இந்திய கடற்படைப்படகுகளும் இரண்டு சிறிலங்காக் கடற்படைப் படகுகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கடல் மாசுபடுவதைத் தடுப்பதற்கும், உயிர்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்தக்கூட்டு நடவடிக்கை பயன்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மரண தண்டனையை அமுல்படுத்த சனாதிபதி மகிந்த தீர்மானம்

பாரிய குற்றச்செயல்களைத் தடுக்க மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவது தொடர்பாக சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளதாக நீதி மற்றும் நீதிமறுசீரமைப்பு அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பான விசேட பேச்சுவார்த்தை ஒன்று அடுத்த வாரத்தில் சனாதிபதி தலைமையில் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதில் சட்டமா அதிபர் திணைக்களம், நீதியமைச்சு, நீதிபதிகள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தநிலையில் மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவது குறித்து முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தயாராகவே இருந்தாகத் தெரிவித்த நீதியமைச்சர், மரண தண்டனையை அமுல்படுத்துவது தொடர்பாக பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

1978 ஆம் ஆண்டு இலங்கையில் மரண தண்டனை இடைநிறுத்தப்பட்டதாக அமரசிறி தொடங்கொட குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையில் 86 பேருக்கு மரணதண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில் 57 பேர் வெலிக்கடைச் சிறைச்சாலையிலும், 27 பேர் கண்டி போகம்பறை சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீதவான் நீதிமன்றங்களுக்கான தண்டனை விதிக்கும் அதிகாரங்களை மேலும் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், குற்ற விசாரணைகளை வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்வதற்கு வசதியாக வழக்குகளை துரிதமாக விசாரிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட விசேட குழு இந்த யோசனைகளை அரசாங்கத்திற்கு பரிந்துரைத்துள்ளது. (32)

# நட்டாங்கண்டல் - முகமாலை பணி
# பனங்காமம் - நட்டாங்கண்டல் - முகமாலை பணியாக மாற்றம்

இப்பேருந்து பணி பொது மக்களின் வேண்டுகைக்கிணங்க 15.12.2005 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## பனங்காமம் - நட்டாங்கண்டல் - முகமாலை

### நேர ஒழுங்கு

| பனங்காமம் | நட்டாங்கண்டல் | பாலையடி | மல்லாவி | கொல்லவிளாங்குளம் | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுநகர் | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 04.45 | 05.00 | 05.30 | 06.00–06.05 | 06.45 | 07.20 | 08.00–08.20 | 08.40–08.50 | 09.10 | 09.35 | 09.40 | 10.00 |

| பனங்காமம் | நட்டாங்கண்டல் | பாலையடி | மல்லாவி | வடகாடு | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுநகர் | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 05.45 | 06.00 | 06.30 | 07.00–07.05 | 07.25 | 07.55 | 08.35–08.55 | 09.05–09.15 | 09.35 | 10.00 | 10.05 | 10.20 |

| பனங்காமம் | நட்டாங்கண்டல் | பாலையடி | மல்லாவி | வடகாடு | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுநகர் | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் 01.00 | 01.15 | 01.40 | 02.00 | 02.15 | 02.30 | 03.05–03.15 | 03.35 | 03.55 | 04.20 | 04.25 | 04.45 |

## முகமாலை - நட்டாங்கண்டல் - பனங்காமம்

### நேர ஒழுங்கு

| முகமாலை | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | வடகாடு | மல்லாவி | பாலையடி | நட்டாங்கண்டல் | பனங்காமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 08.00 | 08.15 | 08.20 | 08.45 | 09.05 | 09.25–09.45 | 10.20 | 10.35 | 10.50 | 11.10 | 12.00 | 12.15 |

| முகமாலை | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | கொல்லவிளாங்குளம் | மல்லாவி | பாலையடி | நட்டாங்கண்டல் | பனங்காமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 10.30 | 10.45 | 10.50 | 11.15 | 11.35–11.45 | 12.05–12.25 | 01.05 | 01.40 | 02.20 | 02.50 | 03.20 | 03.35 |

| முகமாலை | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | வடகாடு | மல்லாவி | பாலையடி | நட்டாங்கண்டல் | பனங்காமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் 02.30 | 02.45 | 02.50 | 03.15 | 03.35–03.45 | 04.05–04.25 | 05.05 | 05.35 | 05.55 | 06.25 | 06.55 | 07.10 |

முகாமையாளர்,
வழியனுமதிப்பணியகம்,
புதுக்குடியிருப்பு.

(சி-13448)

# தமிழீழ வைப்பகம்

# அறிவித்தல்

தமிழீழ வைப்பகத்தின் எக்கிளையிலாவது 01.10.2003 – 31.03.2004 ஆம் நாள் வரையான காலப் பகுதியிலும் (01 வருட கால அடகுக்குடன் சேவை), 01.07.2004 – 31.12.2004 ஆம் நாள் வரையான காலப்பகுதியிலும் (06 மாத கால அடகுக்கடன் சேவை) அடகுக் கடனைப் பெற்று உரிய காலத்தில் அவற்றை மீளச் செலுத்தத் தவறிய கடனாளிகளின் அடகு தங்கப் பொருட்களை தமிழீழ வைப்பகம் விற்பனை செய்யத்தீர்மானித்துள்ளது. எனவே உரியவர்கள் 26.12.2005 ஆம் நாளுக்கு முன்னர் அடகு தங்கப் பொருட்களை மீட்டுக் கொள்ளுமாறு அல்லது புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-13446)

வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தின் தரும்

# அறிவித்தல்

எமது நிறுவனத்தினூடாக இதுவரை காலமும், L.M.L ரக உந்துருளி, அக்றிமெக் உழவுச்சிற்றூர்தி, றொபின் நீர் இறைக்கும் இயந்திரம் ஆகியவற்றுக்கான விற்பனைக்கு பிந்திய சேவையினை வழங்க கொழும்பு ஜினசேன கம்பனி தொழில் நுட்பவியலாளர்களை இவ்விடம் வரவழைத்துள்ளோம். இச்சேவை 10.12.2005 ஆம் நாள் தொடக்கம் 13.12.2005 ஆம் நாள் வரை எமது நிறுவனத்தில் நடைபெறும் வழமையாளர்கள் இச் சேவையினைப் பெற்று பயனடையுமாறு வேண்டிக்கொள்கிறார்கள் வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனத்தினர்.

வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனம்,
கண்டி சாலை
கிளிநொச்சி

(7084)

# JANASHAKTHI

உயரச் சிறகடிப்போம்



இலங்கையின் முதல்தர காப்புறுதிக் கம்பனியாக விளங்குவதே எங்களின் நோக்கு இந்த நோக்கை நாம் பின்பற்றுவதன் ஆர்வம் இன்று வரை நாங்கள் எய்திய பெறுபேறுகளினால் நன்கு அறியப்பட்டுள்ளது.

இலங்கையில் இத்துறையில் உள்ளோர் அனைவரையும் விஞ்சி ஒரு குறுகிய பத்து வருட காலத்தினுள் 300 கோடிக்குமேல் வருடாந்த கட்டுப்பண வருமானத்தை சம்பாதிக்கும் ஒரேயொரு காப்புறுதிக்கம்பனி எம்முடையதே. அத்துடன் நடப்பு ஆண்டு முடிவில் 400 கோடியை எய்தும் பாதையில் நன்கு முன்னேறுகின்றோம்.

இது முதலாவதுக்காக வரவேண்டும் எனும் சவால்களை ஏற்கும் ஆர்வம் பற்றியது. உயரச்சிறகடிப்போம் எம்மை அங்கு கொண்டு செல்ல உள்ளனர். அதை அடைய எது தேவையோ அதை நீர் கொண்டிருப்பின் நாம் எப்பொழுதும் உமக்காக ஒரிடத்தைக் கொண்டிருக்கிறோம்.

வடக்கு கிழக்கு கிளை அலுவலகங்களில் உள்ள வெற்றிடங்கள்

## காப்புறுதி உதவியாளர்கள்

23 வயதுக்கு மேற்பட்டவராகவும், க.பொ.த உயர்தர பரீட்சையில்குறைந்தது 2 பாடங்களில் சித்தியும், க.பொ.தசாதாரணப்பரீட்சையில்கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். பொது மற்றும்அல்லது ஆயுட்காப்புறுதியில் அனுபவம் விரும்பத்தக்கது. எனினும் அது முக்கியமானதல்ல.

## காப்புறுதி நிறைவேற்று அதிகாரிகள்

25 வயதிற்கு மேற்பட்டவராகவும் பொது மற்றும் அல்லது ஆயுட்காப்புறுதியில் 3-5 ஆண்டு அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும். காப்புறுதிக்கோட்பாடுகள், செயற்பாடுகள் பற்றிய அறிவும், காப்புறுதி உரிமைக்கோரிக்கை என்பவற்றை கையாளக்கூடிய திறனும் விரும்பத்தக்கது. விரும்பத்தக்க விண்ணப்பதாரர் வாடிக்கையாளர் சேவைக்கான விருப்பையும் சிறந்த மக்கள் தொடர்பாடல் திறனையும்நீண்ட மணித்தியாலங்கள் சேவையாற்ற தயாராகவும் தேவைப்படின் சுழற்சி முறையில் சேவையாற்ற தயாராக இருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் எழுதவும் பேசவுமான சிறந்த தொடர்பாடல் திறன் அத்தியாவசியமானது.

க.பொ.த உயர்தரத்தில் குறைந்தது 02 சித்திகளும், க.பொ.த சாதாரணப் பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார்,வவுனியா ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்படவுள்ள எமது கிளைகளில் காணப்படுகின்றன.

ஆயுட்காப்புறுதி, அறுவைச்சிகிச்சை, மற்றும்மருத்துவமனைப்படுத்தல், காப்புறுதி உயர் தொழில்சார் கல்விக்கான உதவி உட்பட தொழிற்போட்டிசார் ஊதியமும் மற்றைய அனுகூலங்களும் வழங்கப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள எந்தவொரு வெற்றிடத்திலும் நீங்கள் தகுதியுடையோரெனக் கருதுவீராயின்உங்களது கல்வித் தகைமைகள் அடங்கிய சுயவிபரக் கோவைகளை கீழ்காணும் விலாசத்திற்கு உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் உங்களது தொலைபேசி இலக்கம் என்பன சகிதம் 23.12.2005 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்கிடைக்கத் தக்கவாறு அனுப்பிவைக்கவும்.

எதிர்பார்க்கப்படும் தகைமைகளும் திறனும் அற்றவர்கள் விண்ணப்பிக்கவேண்டியதில்லை

Sr. Manager - Human Resource Development
JANASHAKTHI INSURANCE CO. LTD.,
3rd Floor, Access Towers
278, Union Place, Colombo 02.

(நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிதனையும் அத்துடன் தொழில் புரிய விரும்பும் பிரதேசத்தினையும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்)

JANASHAKTHI INSURANCE

(சி-13494)

# JANASHAKTHI

பெறுபேறெய்துவோர்



இலங்கையின் முதல் தர காப்புறுதிக் கம்பனியாக விளங்குவதே எங்களின் நோக்கு இந்த நோக்கை நாம் பின்பற்றுவதன் ஆர்வம் இன்று வரை நாங்கள் எய்திய பெறுபேறுகளினால் நன்கு அறியப்பட்டுள்ளது.

இலங்கையில் இத்துறையில் உள்ளோர் அனைவரையும் விஞ்சி ஒரு குறுகிய பத்து வருட காலத்தினுள் 300 கோடிக்கு மேல் வருடாந்த கட்டுப்பண வருமானத்தை சம்பாதிக்கும் ஒரேயொரு காப்புறுதிக் கம்பனி எம்முடையதே. அத்துடன் நடப்பு ஆண்டு முடிவில் 400 கோடியை எய்தும் பாதையில் நன்கு முன்னேறுகின்றோம்.

இது முதலாவதுக்காக வரவேண்டும் எனும் சவாலை ஏற்கும் ஆர்வம் பற்றியது. பெறுபேறெய்துவோர் எம்மை அங்கு கொண்டு செல்ல உள்ளனர். அதை அடைய எது தேவையோ அதை நீர் கொண்டிருப்பின் நாம் எப்பொழுதும் உமக்காக ஒரிடத்தைக் கொண்டிருக்கிறோம்.

வடக்கு கிழக்குகிளை அலுவலகங்களில் உள்ள வெற்றிடங்கள்

## வியாபார விருத்தி நிறைவேற்று அதிகாரிகள்

கணிதம் உட்பட க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 06 பாடங்களிற்சித்தியும் 21 வயதிற்கு மேற்பட்டவராகவும், குறைந்தது 2-3 வருடங்கள் விற்பனை அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும். க.பொ.தஉயர்தர பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் அது மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

## வியாபார விருத்தி அலுவலர்கள்/ உதவியாளர்/விற்பனை மேற்பார்வையாளர்கள்

கணிதம் உட்பட க.பொ.த சதாரணப்பரீட்சையில் 06 பாடங்களிற் சித்தியடைந்தவராகவும் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல்வேண்டும். விற்பனை அனுபவம் அவசியமற்றது. மேற்படி சகல பதவிகளுக்கும் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கும் ஆயுட்காப்புறுதி அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவமனைப்படுத்தல் காப்புறுதி, உயர்தொழில்சார் கல்விக்கான உதவி உட்பட தொழிற்போட்டிசார் ஊதியமும் மற்றைய அனுகூலங்களும் வழங்கப்படும்.

## பிரதேச பிரதிநிதிகள்

இது வரையறையற்றதோர் வருமானத்தைத் தரவல்ல சந்தர்ப்பமாகும்.வருமானத்தை வரையறைக்கு உட்படுத்த விரும்பாத தனிப்பட்ட கடினஉழைப்பாளிக்கு இது உகந்தது. நீங்கள் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும்,க.பொ.த சாதாரணப் பரீட்சையில் ஒரே தடவையில் கணிதத்தில் சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கணிதத்தில் சித்தி இன்றேல் 5வருடக் காப்புறுதி முகவராக அனுபவமுடையவர்களினது விண்ணப்பங்களும் சாதகமாகப் பரிசீலிக்கப்படும்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் மொழியில், எழுதுவதிலும் உரையாடுவதிலும் சிறந்த தேர்ச்சியுடையவராகவும் இருத்தல் வேண்டும். வாடிக்கையாளர்சேவையில் நாட்டமுடையவராகவும் இருத்தல் அவசியமாக இருப்பதுடன்,நீண்டமணிநேரவேலை புரிய அர்ப்பணிப்புடையவராகவும் இருப்பதுடன் காப்புறுதியை முழுநேர அல்லது பகுதிநேர தொழிலாகப் புரிய ஆர்வ முடையவராகவும் இருத்தல் அவசியம். காப்புறுதித்துறை யில் உயர்பதவி வகிக்கும் நிபுணத்துவத் தகுதிபெற நிறுவனமே உங்களது திறன்களை மேம்படுத்த வழி வகுக்கும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவெற்றிடங்கள்முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார்,வவுனியா ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்படவுள்ள எமதுகிளைகளில்காணப்படுகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள எந்தவொரு வெற்றிடத்திலும் நீங்கள் தகுதியுடையோரெனக்கருதுவீராயின் உங்களது கல்வித்தகைமைகள் அடங்கிய சுயவிபரக் கோவைகளை கீழ்காணும் விலாசத்திற்கு உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் உங்களது தொலைபேசி இலக்கம் என்பன சகிதம் 23.12.2005 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கவாறு அனுப்பி வைக்கவும்.

எதிர்பார்க்கப்படும் தகைமைகளும் திறனும் அற்றவர்கள் விண்ணப்பிக்கவேண்டியதில்லை.

Sr. Manager - Human Resource Development
JANASHAKTHI INSURANCE CO. LTD.,
3rd Floor, Access Towers
270, Union Place, Colombo 02.

(நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிதனையும் அத்துடன் தொழில் புரிய விரும்பும் பிரதேசத்தினையும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்)

JANASHAKTHI INSURANCE

(சி-13493)

# 64 போட்டிகளைக் கொண்ட உலகக்கிண்ண கால்பந்து பேர்லின் ஒலிம்பிக் மைதானத்தில் இறுதிப்போட்டி




உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களைக் கொண்ட விளையாட்டு கால்பந்தாட்டம். அதற்கான உலகக் கோப்பைப் போட்டி மிகவும் பிரசித்தி பெற்றது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

அடுத்த உலகக் கோப்பை கால்பந்துப்போட்டி ஜேர்மனியில் 2006ஆம் ஆண்டு யூன் ஒன்பது முதல் யூலை ஒன்பது ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

அதில் விளையாடுவதற்காக உலகம் முழுவதிலும் இருந்து 32 நாடுகள் தேர்வு பெற்றுள்ளன. யார் யாருடன் மோதுவது என்பதற்கான குலுக்கல் கிழக்கு ஜேர்மனியில் உள்ள லீப்சிக் நகரில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. தலா நான்கு நாடுகள் வீதம் எட்டுப் பிரிவுகளாக பங்கேற்கும் அணிகள் பிரிக் கப்பட்டுள்ளன.ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் அடுத்த கட்ட ஆட்டத்துக்கு முன்னே றும்.

உலகக் கோப்பை போட்டியில் மொத்தம் 64 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.இறுதி ஆட்டம் பேர்லினில் உள்ள ஒலிம்பிக் பார்வையாளர் அரங்கில் யூலை ஒன்பதாம் திகதி நடைபெற வுள்ளது.

போட்டியை நடத்தும் ஜேர்மனி"ஏ"பிரிவில் இடம்பெற்றுள்ளது. போட்டி தொடங்கும் யூன் ஒன்பதாம் திகதி தனது முதல் ஆட்டத்தில் கோஸ்டா ரிகாவுடன் மோதுகிறது.ஜேர்மனி மூனிச்சில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. போலந்து ஈகுவடோர் ஆகிய நாடுகள் பிரிவு'ஏ'யில் இடம்பெற்றுள்ள மற்றைய நாடுகள். நடப்பு சம்பியன் பிரேஸில், குரோஷியாவுடன் முதல் லீக் ஆட்டத்தில் பங்கேற்கிறது. இந்த ஆட்டம் பேர்லின் நகரில் யூன் 12 ஆம் திகதி நடைபெறுகிறது. ஆசியநாடான ஜப்பான்,அவுஸ்திரேலியா ஆகியன பிரேசிலுடன் 'எப்' பிரிவில் இடம்பெற்றுள்ளன.'சி' பிரிவில் இடம்பெற்றுள்ள அணிகளிடையேயான ஆட்டங்களே மிகவும் கடினமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஹாலந்து. ஆர்ஜென்டினா,செர்பியா மான்டெனக்ரோ, ஐவரிகோஸ்ட் ஆகிய நாடுகள் அப்பிரிவில் இடம்பெற்றுள்ளன.

மற்றொரு முக்கியமாக அணியான இங்கிலாந்து 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ளது. ஸ்வீடன், பராகுவே,டிரினிடாட்அன்டு டபாகோ ஆகியன நாடுகள் அப் பிரிவில் இடம்பெற்றுள்ள மற்றைய நாடுகள்.

தகுதிப்போட்டியில் மோதிக் கொண்ட பிரான்ஸ், சுவிச்சர்லாந்து ஆகியன உலகக்கோப்பையிலும் மோதும் வாய்ப்பைப் பெற்றுள்ளன.'ஜி'பிரிவில் இடம்பெற்றுள்ள இவ்விரு அணிகளிடையிலான ஆட்டம் யூன் 13ஆம் திகதி ஸ்டுட்கார்ட்டில் நடைபெறவுள்ளது.



குலுக்கல் தொடங்குவதற்த முன்பாக அரங்கிற்கு அழைத்து வரப்பட்ட உலகக் கோப்பை சின்னம் (வலது) பட்டம் வெல்லும் அணிக்கு வழங்கப்படும் உலகக் கோப்பை.



இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் தனது முதலாவது சதத்தைப் பெற்ற மகிழ்ச்சியில் சச்சின் டெண்டுல்கர். இங்கிலாந்தில் ஓல்டு டிராபோர்டில் இப்போட்டி நடைபெற்றது.

# பி.பி.சியின் ஆண்டின் சிறந்த வீரர் விருது சுழல் பந்து வீச்சாளர் வோர்ன் பெற்றார்



பி.பி.சி வழங்கும் வருடாந்த சிறந்த வீரர் விருதுக்கான விருதை உலகில் டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய (645) விக்கெட்டுக் களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளரான ஷேன் வோர்ன் பெற்றுள்ளார்.

36 வயதான வோர்ன் இவ்வருடம் 40 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இந்த விருது பெறும் முயற்சி தமக்கு பெரும் மகிழ்ச்சியளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விருது இவரை விட கார் ஓட்டப்பந்தய வீரர் பெர்னாண்டோ அலன்சோ, டுவர் டிபிரான்ஸ் ஆறு முறை வென்ற துவிச்சக்கர வண்டி சவாரி யாளர் லான்ஸ் ஆம்ஸ்ரோங், விம்பிள்டன் சம்பியன் றோஜர் பெடரர் ஆகியோருக்கும் வழங்கப்பட்டது.




# எனது சாதனைகள் தந்தைக்கு சமர்ப்பணம்





அஞ்சலி

கவாஸ்கரின் சாதனையை முறியடித்தது மிகவும் சந்தோஷமாக உள்ளது. எனது முதல் சதத்திற்கும், இப்போது அடித்த சதத்திற்கும் வித்தியாசம் உள்ளது. ஆனால் இரண்டும் முக்கியத்துவம் வாய்ந்தது. முதல்சதம் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்று எனத்தெரிவித்துள்ளார் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின்.

35 ஆவது சதம் அடித்த போது மிகவும் பதற்றமாக இருந்தது. இந்த சாதனைகளை படைப்பதற்கு எனது தந்தை தான் முக்கிய காரணம். என்னை அவர் மிகவும் ஊக்குவித்தார் எனது சாதனைகளை அவருக்கு அர்ப்பணிக்கிறேன்.

டில்லி டெஸ்டில் சதம் அடிக்க பயிற்சியாளர் சப்பலும் எனது மனைவியும் உறுதுணையாக இருந்தார்கள். சப்பல் சதம் அடிப்பதை கருத்திற்கொண்டு விளையாடவேண்டாம் எனவும், எப்போதும் போல் ஆடுமாறு கூறினார். இதேகருத்தை எனது மனைவி அஞ்சலியும் கூறினார்.

கவாஸ்கர் பலசாதனைகளை படைத்தவர். என்னுடைய சாதனைகளுக்கும் அவரும் உதவி புரிந்துள்ளார். கவாஸ்கர்தான் என்னுடைய ஹீரோ. தற்போது அணி மிகவும் நன்றாக உள்ளது வீரர்கள் ஒற்றுமையுடன் விளையாடுகிறோம் என்றார்.

# முரளிதரன் அற்புத பந்துவீச்சு இந்தியா முதல் இனிங்ஸ் 290

## கும்ளேயின் பந்துவீச்சில் தடுமாறுகிறது சிறிலங்கா



இந்திய - சிறிலங்கா அணிகளுக்கிடையில் அகமதாபாத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முரளிதரனின் அற்புதமான பந்துவீச்சு இந்திய அணியை 290 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்தியது.

245 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்கள் என்ற நிலையில் இரண்டாம் நாளான நேற்று முதலாவது ஆட்டத்தைத் தொடர்ந்த இந்திய அணி மேலும் 45 ஓட்டங்களைப் பெற்று எஞ்சிய ஏழு விக்கெட்டுக்களையும் இழந்தது.

35 சதத்தைப் பெற்று சாதனை படைத்த சச்சின்டெண்டுல்கர் மேலும் ஒன்பது ஓட்டங்களை சேர்த்து 109 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவரைவிட லக்ஸ்மன் 69, கங்குலி 40 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்று ஆட்டமிழந்தனர். யுவராஜ்சிங், பதான் ஆகியோர் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் சிறிலங்காவின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன் அற்புதமாக பந்துவீசி நூறு ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இவரைவிட மற்றுமொரு சுழல்பந்து வீச்சாளரான மாலிங்க பண்டார இரண்டு விக்கெட்டுக்களையும்,





சமிந்தவாஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இனிங்சை ஆடும் சிறிலங்கா 198 ஓட்டத்துக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்து தடுமாறி வருகிறது. அத்தப்பத்து 88, ஜெயவர்த்தன 60 ஓட்டங்களை அதிகபட்சமாகப்பெற்று ஆட்டமிழந்தனர்

அனில் கும்ளே 21.5 ஓவர் பந்துவீசி 54 ஓட்டங்களை கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இன்று போட்டியின் மூன்றாம் நாள்

# வெளிநாட்டு சுற்றுப்பயணத்துக்கு முன்னர் இங்கிலாந்து காலநிலையை கருத்திலெடுக்கவேண்டும்



வெளிநாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட்போட்டிகளில் பங்கேற்கும் முன் இங்கிலாந்து அணி காலநிலைபற்றி அறிவித்து அதற்கேற்றவாறு போட்டிகளை குறைத்துக் கொள்ளவேண்டும் எனப் போட்டிகளை தயார்ப்படுத்தும் அதிகாரி ஜோன்கர் தெரிவித்துள்ளார்.

ஒரு டெஸ்ட் போட்டி முடிந்தவுடன் அதனால் வீரர்கள் களைத்துப்போய் இருப்பதைக் கருத்தில்கொண்டு அடுத்த போட்டித் தொடரை தயார்ப்படுத்தவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி கடந்த 2003ஆம் ஆண்டுக்குப்பின்னர் அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான போட்டியில் தோல்வியைச் சந்தித்தது.இங்கிலாந்து அணி பாகிஸ்தான் டெஸ்டுக்கு முதல் இரண்டு பயிற்சிப்போட்டிகளில் பங்கேற்றமையால் களைத்துப்போய் டெஸ்ட்போட்டியில் தோல்வியை சந்தித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



### சிந்தனைக்கு

நாங்கள் ஒரு உன்னத இலட்சியத்திற்காகப் போராடி வருகிறோம். அந்த இலட்சியத்திற்காக உழைப்பதும் வாழ்வதும் எங்களுக்குப் பூரண ஆத்ம நிறைவைத் தருகிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 12.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# மாற்றம் எதுவுமில்லை

சிறிலங்கா சனாதிபதி விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருதல் வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளதோடு, நோர்வேயையும் சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

ஆனால், இவ்விரு விடயங்களும் இனப்பிரச்சினை விகாரத்தில் புதியதொன்றல்ல. அத்தோடு, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் முன்வரவேண்டும் என அழைப்பு விடுதல் என்பது அர்த்தமற்றதொன்றாகும். ஏனெனில், ஏற்கனவே விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் பங்குபற்றியுள்ளதோடு. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணப்படுதல் வேண்டும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே யுத்தநிறுத்த உடன்பாட்டையும் தொடர்ந்து கடைப்பிடித்துவருகின்றனர்.

இதேபோன்றே நோர்வேயை அழைத்ததுமாகும். இதில் ஏற்கனவே நோர்வே வகித்த பாத்திரத்தை மீண்டும் வகிக்குமாறு நோர்வே அழைக்கப்பட்டுள்ளது என்பது மட்டுமே சரியானதாகும். அதாவது நோர்வே ஏற்கனவே இங்கு சமாதான ஏற்பாட்டாளராக கடமையாற்றியுள்ளது. இந்நிலையில் புதிய அழைப்பு என்பது நோர்வேயை வெளியேற்றுவோம் எனக்கூறிக் கொண்டிருந்தவர்கள் தமது நிலையை மாற்றிக்கொண்டுவிட்டனர் என்பது மட்டுமே புதிய தகவலாகும்

ஆனால், தற்பொழுதுள்ள விடயமானது, மேற்கூறப்பட்டவாறு விடுதலைப்புலிகளுக்கு பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்ததன் மூலமாகவோ அன்றி நோர்வே அரசு சமாதான ஏற்பாட்டாளராகப் பணியாற்றுமாறு அழைத்ததினாலோ பிரச்சினை ஒன்றும் தீர்ந்துவிடப் போவதில்லை. ஏனெனில் ஆட்சியாளர்கள் பேச்சிற்குத் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார்களே ஒழிய இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண அவர்கள் முன்வரவில்லை.

எடுத்துக்காட்டாக அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளபோதும், அது குறித்து தெளிவான நிலைப்பாடு எதையும் கொண்டதாக ஆட்சியாளர்கள் இல்லை. மாறாகத் தமது பழைய வழியில் தொடர அவர்கள் விரும்புவதாகவே தெரிகின்றது.

குறிப்பாக சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் தமிழர் தாயகம், சுயநிர்ணயம் என்பன நிராகரிக்கப்பட்டுள்ளன. நோர்வேக்கு அழைப்பு விடுத்த மகிந்த ராஜபக்ஷ இது குறித்து மாற்றம் எதையும் அறிவிக்கவில்லை. ஆகையினால், இன்னமும் அவர் ஒற்றையாட்சி முறைக்குள் தீர்வு என்ற நியாயப்பாட்டில் நிற்பதாகவே தெரிகின்றது.

இது போன்றே விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டதாக இல்லை. ஆகையினால், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வில் நோர்வேயால் எவ்வாறு முன்னேற்றம் காண முடியும்?

அடுத்ததாக யுத்தநிறுத்த விதிகளை மாற்றியமைக்க – அதாவது புதிய யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்று தயாரிக்கப்பட்டு சிறிலங்கா சனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முப்படைகளின் கூட்டுத்தளபதி வைஸ்அட்மிரல் தயாசந்தகிரி தெரிவித்துள்ளார். இதன் பிரகாரம் யுத்தநிறுத்த உடன்பாட்டை மறுசீரமைப்பதென்பது அரசின் உறுதியான தீர்மானமாகவுள்ளது.

ஆனால், விடுதலைப்புலிகள் இயக்கமோ தெளிவாகவும், உறுதியாகவும் யுத்தநிறுத்த உடன்பாட்டில் மாற்றம் எதையும் கொண்டு வருவதை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனக்கூறிவிட்டது. இந்நிலையில் உடன்பாட்டை மாற்றி அமைத்தல் என்ற ரீதியில் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யுத்தத்திற்குச் செல்வதாகவே இருக்கும்.

அதாவது மகிந்த ராஜபக்ஷ மீண்டும் தொடக்கப் புள்ளியில் இருந்தே ஓட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்கிறார். ஆனால் விடுதலைப்புலிகள் அமைப்பு இதற்குத் தயாராக இல்லை. சர்வதேச நாடுகள்கூட அதற்கு ஆதரவாக இல்லை என்றே கூறலாம். ஆகையினால், மகிந்த ராஜபக்ஷ பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமானால் தடைப்பட்ட இடத்திலிருந்து தடைப்பட்ட விடயத்திலிருந்தே தொடங்குதல் வேண்டும். இனப்பிரச்சினையை கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிக்குக் கொண்டு செல்லலாம் என எண்ணக் கூடாது.

இனப்பிரச்சினையை இழுத்தடித்தவாறு மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியாக சிரமமின்றி ஆட்சி நடத்துவதற்காக புலிகள் கால அவகாசத்தை வழங்க இயலாது. அதாவது பேச்சுவார்த்தைகளை ஆரம்பத்திலிருந்து தொடங்குவதற்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் நாங்களே என மீண்டும் ஒரு தடவை நிருபிப்பதற்கும் வேண்டிய தேவையோ அவசியமோ தமிழ் மக்களுக்கும், புலிகளுக்கும் இல்லை. ஆகையினால்தான் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு ஒரு குறுகிய கால அவகாசம் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இதனைப் பொருட்படுத்தாது போனால் தமிழ் மக்கள் தமது உரிமைக்கான போராட்டத்தை - ஆயுத போராட்டத்தை மீண்டும் தொடங்குவது தவிர்க்க முடிய தாகிவிடும்.

# போர் நிறுத்த கண்காணிப்பு பணியில் ஆசிய நாடொன்றை கொண்டுவர முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் 2002 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையை கண்காணிப்பதற்கு வடக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக்கொண்டு நியமிக்கப்பட்ட யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்களை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அரசாங்க வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவை நீக்குவது சம்பந்தமாக சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகளிடமிருந்து அரசாங்கத்திற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் உள்ளக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் இது குறித்து கடந்த காலத்தில் பகிரங்கமாக தங்களின் கருத்துக்களைத் தெரிவித்திருந்தன. தற்போது செயற்படும் கண்காணிப்புக் குழுவிற்குப் பதிலாக சார்க் வலய நாடுகளில் அல்லது ஐரோப்பியாவின் வேறு நாடுகளிலிருந்து புதிய கண்காணிப்பாளர்களைத் தெரிவு செய்து நியமிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

யுத்த நிறுத்த கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஸ்கன்டினேவிய நாடொன்று உட்பட புதிய ஆசிய நாட்டுப் பிரவேசம் குறித்து கவனம் செலுத்துவது உகந்தது என சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசியிடம் கூறியுள்ளார்.

எதிர்வரும் சனவரிக்குப் பின்னர் இந்தப் புதிய கண்காணிப்புக்குழு நியமிக்கப்படுவதற்கு இடமுள்ளதாக தெரியவருகிறது.

# 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியிலிருந்து ஆளும்கட்சிக்கு தாவலாம்

(கொழும்பு)

எதிர்க்கட்சியில் இருந்து 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணையவுள்ளதாக அரசாங்கத் தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் வெகு விரைவில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள வுள்ளனர்.

பாராளுமன்றத்தில்சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு மூன்றில் இரண்டு அதிகாரத்தை கைபற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. இது சம்பந்தமாக எதிர்க்கட்சியில் இருந்து அநேக பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். இதில் முதல் கட்டமாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உறுப்பினர் ஒருவர் தற்பொழுது அரசாங் கத்தில் இணைந்துள்ளார். மற்றும் மூன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கள் அரசாங்கத்தில் இணைவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்.

அடுத்த கட்டமாக எதிர்க்கட்சியில் இருந்து 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

# சந்தேகத்தில் கைது

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மற்றுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளத்தைச் சேர்ந்த இவர் கலேவெலவிற்கு வருவதற்கு முன்னதாக வத்தளையில் இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையின் இறைமையை பாதிக்கும் எந்தச் செயற்பாட்டிற்கும் இணங்கப்போவதில்லை

## மகிந்த ராஜபக்ஷ யப்பான் தூதுவரிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளின் போது இலங்கையின் இறைமையைப் பாதிக்கும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் இணங்கப்போவதில்லை என்று சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யப்பானிய சிறப்பு தூதுவர் யசூசி அகாசியிடம் தெரிவித்துள்ளார்.

யப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசியுடன் சமாதான நடவடிக்கைகள் குறித்து சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இதன் போது நோர்வே சிறப்புத் தூதுவரும் அந்நாட்டின் சர்வதேச அபிவிருத்தித்துறை அமைச்சருமான எரிக் சூல்ஹெய்ம் சர்வதேச ஊடகங்களுக்கு கூறியிருப்பது போன்று அவர்களின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்லத் தயாராக இல்லை என்று மகிந்த ரராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் எக்காரணம் கொண்டும் நோர்வேயின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டாது எனவும், நாட்டினதும் மக்களினதும் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு தேசிய பொறுப்புணர்வுடனேயே சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடும் என்றும் சனாதிபதி யப்பானிய தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

நோர்வே சிறப்புத் தூதுவர் சமாதான செயற்பாடுகள் குறித்து தெரிவிக்கும் சில கருத்துக்கள் குறித்து சனாதிபதி சிறப்புத் தூதவரிடம் விமர்சிக்கும் வகையில் விடயங்களை எடுத்துக் கூறியுள்ளார்.

பிரித்தானிய வானொலிக்கு தெரிவித்ததாகக் கூறப்படும் கருத்துக்கள் பற்றி தூதரக சம்பிரதாயங்களுக்கு அமைய நோர்வே சிறப்புத் தூதுவரிடம் விடயங்களை கேட்டறிந்து கொள்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் தயாராகி வருவதாக தெரியவருகிறது.

## ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவுடனான ஒப்பந்தம்

# பதவியேற்று 22 நாட்களுக்குள் மகிந்த மூன்று முக்கிய விடயங்களை மீறிவிட்டார்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி ஆகிய கட்சிகளுடன் மகிந்த ராஜபக்ஷ உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட 22ஆவது நாளில் மூன்று முக்கிய விடயங்களை மீறிவிட்டதாக "இருதின" எனும் சிங்களப்பத்திரிகை கூறுகிறது. இந்த மூன்று விடயங்களும் இந்நாட்டின் இனப்பிரச்சினையுடன் தொடர்பானதாகும். இந்த கட்சிகள் தனித்தனியாக ஒப்பந்தம் செய்துள்ளன. இவற்றுள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மாற்றியமைப்பது, நோர்வே மத்தியஸ்த்தத்தை விலக்குதல், ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பது என்பன அடங்கும்.

கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்கு முன்பு இக்கட்சிகள் மகிந்தவுடன் 12 விடயங்களில் ஒப்பந்தம் ஒன்றை செய்தன.இதில் நான்கு முக்கியமானவையாகும்.

விடுதலைப் புலிகளுடன் ரணில் செய்துகொண்ட ஒப்பந்தம் சிறிலங்காவின் இறைமைக்கு குந்தகம் விளைவிப்பதாகவும் நோர்வே பக்கசார்பாக நடந்து கொள்வ தாகவும் கூறி மேற்படி விடயங்களில் மாற்றம் கொண்டுவர உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

எனினும் கடந்த வாரம் ஜே.வி.பியைச் சந்தித்த மகிந்த நோர்வேயின் மத்தியஸ்தத்தின் அவசியம் பற்றியும் ஒற்றையாட்சியின் கீழ் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாததை இந்தியா சுட்டிக்காட்டியிருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இறுதியில் சமாதான நடவடிக்கையில் நோர்வேயை விலக்க முடியாவிடில் கண்காணிப்புப் பணியிலிருந்தாகிலும் விலக்க வேண்டும் என ஜே.வி.பி கேட்டுக்கொண்டது. இது தொடர்பாக ஏதாவது செய்வதாக மகிந்த தெரிவித்தார். இறுதியில் ஜே.வி.பியை அமைதிகாக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கிடையில் இந்தியாவுக்கு மங்கள சமரவீர விஜயம் மேற்கொண்டபோது ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு என்பதற்குப் பதிலாக ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற உடன்படிக்கையைச்செய்துகொள்ளப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

# லெப்.கேணல் மறவனின்

# முதலாமாண்டு நினைவஞ்சலி

(அலுவலக செய்தியாளர்)

லெப்.கேணல் மறவனின் முதலாமாண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் நேற்று முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரியில் சிறப்புற இடம்பெற்றது.



லெப்.கேணல் மறவன் தமிழீழத்தில் நுண்கலைகளின் வளர்ச்சிக்காக உழைத்தவர் என்ற வகையில் அவரின் இவ் அஞ்சலி நிகழ்வினை முள்ளியவளை நுண்கலைக்கல்லூரியினர் ஒழுங்கமைத்திருந்தனர். தமிழீழ கடற்படையினரின் அனுசரணையுடன் நடைபெற்ற இவ் அஞ்சலி நிகழ்வு பிற்பகல் மூன்று மணிக்கு இடம்பெற்றது.

தமிழீழ நுண்கலைப்பிரிவுப் பொறுப்பாளர் தணிகைமாறன் தமிழீழத் தேசியக்கொடியினை ஏற்றினார். தொடர்ந்து லெப்.கேணல் மறவனின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரினை முள்ளியவளைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏற்றிவைக்க, தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா மலர்மாலையினை அணிவித்தார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. அடுத்து நினைவுரைகளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசமேலாளர் மோகன், தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர், பேபி ஆசிரியை ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து நிகழ்வில் பங்குபற்றிய கலைஞர்களுக்கு பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ச)

# கிளிநொச்சிப் பகுதியில்

# தொலைபேசி சேவை துண்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் காலவரையறை அற்ற முறையில் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இலங்கை தொலைத் தொடர்பு தாபனத்தினால் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அருகாமையில் இருக்கும் தொலைத் தொடர்பு மையத்தினால் கிளிநொச்சிப் பகுதிக்கு வழங்கப்பட்டு வந்த தொலைபேசி சேவையே இவ்வாறு துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொலைபேசி இணைப்பானது நேற்று முன்தினம் காலை 10.00 மணியிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கிளிநொச்சியிலுள்ள தொலைத் தொடர்பு மையத்திற்கு சென்ற போது அங்கு முக்கிய அதிகாரி இருக்கவில்லை. அங்கிருந்த ஊழியர் கருத்துத் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் தொலைத் தொடர்புக் கோபுரத்தில் பழுது ஏற்பட்டதால் தான் இங்கு இணைப்பு துண்டிக்கப்பட்டது என்றும், எனினும் மேற்கொண்டு இணைப்புக்கள் எத்தனைத் தினங்களில் சீராகும் என்பது பற்றித் தெரியாது எனவும் கூறினார். அத்துடன் கிளிநொச்சி நகரில் பல பகுதிகளில் தொலைபேசி இணைப்புக் கம்பிகள் அறுந்து ஆங்காங்கே வீதிகளில் கிடப்பதைக் காண முடிகிறது. எனவே இவற்றை நிவர்த்தி செய்து விரைவில் தொலைபேசி வசதியை ஏற்படுத்தித் தருமாறு பாவனையாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.(கு.தி)

# லெப்.கேணல் நவநீதன் பயிற்சிப் பாசறையின்

# ஆறாவது அணியினருக்கான பயிற்சி நிறைவு

(வவுனியா)

வவுனியாவில் லெப்.கேணல் நவநீதன் பயிற்சிப் பாசறையின் ஆறாவது பயிற்சி அணியினருக்கான பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வு வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போது எமது தேசியத் தலைவர் எமது மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்கு உறுதியுடனிருக்கிறார். நாம் குந்தியிருக்க எமக்கு நிலம் வேண்டும். நாம் விரைவாக ஒரு வெற்றியை பெறவேண்டுமானால் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். எம்மக்கள் மீது ஒரு போர் திணிக்கப்படுமாக இருந்தால் போர் செய்துதான் வெற்றிகொள்ள முடியுமென கருத்துரைத்தார்.

இப்பயிற்சிப் பாசறையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான அரச உத்தியோகத்தர்கள், பயிற்சி ஆசிரியர்கள், பொறுப்பாளர்கள், போராளிகள் என பலர் கலந்துகொண்டனர்.

## வவு.வைத்திய...

சம்பவம் இடம் பெற்ற சமயம் மூன்று பெண் பொலிசாரும் இரண்டு ஆண் பொலிசாரும் இருந்துள்ளனர். எனினும் ஆயுதம் தாங்கிய ஒருபொலிசாரே அங்கு கடமையில் இருந்துள்ளார். சம்பவம் இடம் பெற்ற இடத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் விசாரணைகளினை நடத்தினார். மேலதிக விசாரணைகளினை பொலிசாரை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளார். கடத்திச் செல்லப்பட்ட பெண் குணரட்ணம் புவனேஸ்வரி எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் கொல்லப் பட்ட பொலிஸ் கான்ஸ்டபில் மகேஷ் ரணசிங்க என வவுனியாப் பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)

## இராணுவ...

காயமடைந்த பொது மக்கள் செங்கலடி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா சம்பவத்துடன் புலிகளை

# தொடர்புபடுத்துவது ஊகம்தான்

## -கண்காணிப்புக்குழுத்தலைவர்

வவுனியாவில் சிகிச்சைபெற்ற பெண் கடத்தப்பட்ட சம்பவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் சம்பந்தம் உள்ளதாகக் கூறுவது தற்போதைய நிலையில் வெறும் ஊகம் தான். இது பற்றி தற்சமயம் கருத்துக்கூறுவது மிகவும் கடினம். சம்பவத்தின் பின்னணியில் புலிகள் தான் உள்ளனர் எனப் பொலிசார் குற்றம் சாட்டுகிறார்கள் என இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக எமக்கு பொலிசார் இதுவரை முறைப்பாடெதனையும் மேற்கொள்ளவில்லை. அவர்கள் எம்மிடம் முறையிடுவார்கள் என்றே நான் நம்புகிறேன். இங்குகடத்தல் மற்றும் பொலிசார் கொலைச்சம்பவம் இரண்டும் நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக பொலிசாருடனும் வழமை போன்று புலிகளுடனும் பேசுவோம். இரு தரப்புடனும் ஆராய்ந்து நாம் ஒரு முடிவுக்கு வருவோம் என்றார் அவர்.

## வரலாற்றிற்கு...

ளோடு பொருத்திப் பார்க்கிற வகையில் சூழ்நிலை அமையும் என்பது எங்களது கருத்து.

இப்போது எவர் எதைக் கூறினாலும் தலைவரது மாவீரர் நாள் உரையை மேற்கோள்காட்டித்தான் கூறுகிற நிலையில் அந்த உரை ஒரு தெளிவான பட்டயமாக இருக்கிறது.

மகிந்தர் பதவியேற்று ஏறத்தாழ இரண்டு வாரங்கள் ஆகின்றன. அலரி மாளிகை இப்போது மிக பரபரப்பாக இருக்கிறது. நாளாந்தம் கூட்டங்களும் சந்திப்புக்களுமாக அது இருக்கிறது.

மிகப்பெரிய அரசியல் முடிவினை எடுத்துச் செயற்படுவது போலவும் மிகவும் ஒரு பாரிய பொருளாதார நகர்வுத்திட்டத்தை முன்வைக்க உள்ளதுபோலவும், ஏதோ ஒரு இராணுவ ரீதியான அற்புதமான திட்டத்தை கைவசம் வைத்துக்கொண்டு செயற்படுவது போலவும்,ஒரு மிகப் பிரமாண்டமான தோற்றத்தைக் கொடுப்பதற்காக நாள்தோறும் மிகிந்தர் படுகின்றபாடு சொல்லும் தரமன்று.

மகிந்தர் மரபுசார்ந்து செயற்படவில்லை. அதை நாம்தவறாகச் சொல்லவில்லை. வரவேற்கிறோம். அவர் இப்போது சில முடிவுகளை எடுத்துள்ளதாகக் கேள்விப்படுகிறோம். இனி அவர் பாராளுமன்றத்தில் சிங்களத்திலேதான் பேசப் போகிறாராம்.

எங்களுக்குத் தெரியும் மகிந்தரால் மரபுசார்ந்து செயற்பட முடியாது. அவருடைய இயல்பாக இருக்கலாம். அல்லது 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க செயற்பட்டது போல் ஒரு நடிப்பாகவும் இருக்கலாம் என்றுதான் நாங்கள் நம்புகிறோம். அவரது சொந்த இயல்பு பற்றி நாம் பேச விரும்பவில்லை.

நோர்வேயைக் கூப்பிட்டு பேசி உங்களது நடுவர் முயற்சியைத் தொடருங்கள் என்று கூறி ஒரு "தோற்றப்பாட்டை" சிங்களத்திலே உருவாக்குகிறார்கள்.

ஆனால் நோர்வேக்குச் சொல்லப்பட்டிருக்கிற செய்தியைப் பார்த்தால் நோர்வேக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது போன்ற தோற்றம் கொடுக்கப்படுகிறது.

அதாவது நோர்வே அமைதி முயற்சியில் மட்டும்தான் ஈடுபட முடியும்.தேவையற்று மூக்கை நுழைக்கக் கூடாது என்கிற வகையிலேயே சிங்களத்திலே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

வழமையாக சர்வதேசம் தலையிட்டு ஒரு ஆளும் தரப்புடன் சேர்ந்து திட்டங்களை வகுத்து அமைதி முயற்சிகளூடாகப் பொறிகளை உருவாக்கி விடுதலைப் போராட்டங்களை மென்மைப்படுத்துகிற அந்த விடயங்களுக்கு அப்பால் இந்த முறை ஒரு புதிய அனுபவத்தைச் சர்வதேசம் பெறப்போகிறது. நோர்வே பெறப் போகிறது

சூடான்,பலஸ்தீனம் போன்ற நாடுகளில் தலையிட்டு பல்வேறு அனுபவங்களைப் பெற்றிருக்கும் நோர்வே என்றும் பெறாத அனுபவத்தைப் பெறப்போகிறது.

இந்த முறை சில நிபந்தனைகளை விதித்துத்தான் அமைதி முயற்சிகளில் ஈடுபடுவோம் என்று நோர்வே சொல்லியிருக்கிறது.

அதாவது இந்த நிபந்தனையும் கடப்பாடும் எங்களுக்கு அல்ல. வழமையாக போராடுகிற இயக்கத்துக்குத்தான் இவர்கள் நிபந்தனை விதிப்பார்கள்.

முதன் முறையாக நோர்வே சொலலி இருக்கிறது-நிபந்தனை விதிக்கப்போவதாக ஆளும் தரப்புக்கு- அடக்குவோருக்கு-ஒடுக்குவோருக்கு- நிபந்தனை விதிப்பதாக நோர்வே சொல்லி இருக்கிறது. நோர்வே நிபந்தனை விதிப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சியோடு காத்திருக்கிறோம் என்றார் க.வே.பாலகுமாரன்.

# இராணுவ ட்ரக் மோதி

# ஊரெழுவில் பொதுமகன் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊரெழு சிறிலங்கா இராணுவ முகாம் முன்பாக சிறிலங்கா இராணுவ ட்ரக் வாகனம் மோதி உந்துருளியில் சென்ற பொது மகன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 3.30 மணியளவில் நடந்துள்ளது.

காயமடைந்தவர் அன்ரனி பேர்ட் (வயது-24) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## மூதூரில்...

சமயம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இதனையடுத்து மூதூர் பிரதேசத்தில் பதற்ற நிலை உருவாகியுள்ளது. தோப்பூரிலுள்ள பிரதேச செயலகம் முன்பாக மக்கள் கூடியுள்ளனர் அந்தப் பிரதேசத்தில் தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## சமாதான...

தயாராக உள்ளதாக என்னிடம் தெரிவித்தனர்.

இந்தப் பேச்சுக்களை ஆசிய நாடொன்றிலேயே நடத்துவதற்கு அவர்கள் விருப்புகிறார்கள். அவ்வாறு ஆசியநாட்டில் பேச்சு நடத்துவதானால் யப்பானில் அதனை நடத்த யப்பான் அரசு விரும்புகிறது. அதற்குத் தயாராகவும் உள்ளது.

நேரடிப் பேச்சுக்களை யப்பானில் மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யத் தயாராக இருக்கிறது. இரு தரப்பும் இதனை ஏற்றுக்கொண்டால் நோர்வே அனுசரணையாளரது மத்தியஸ்தத்துடனும், கண்காணிப்புக் குழுவினரின் அவசிய மான பிரசன்னத்துடனும் யப்பானில் ஏற்று நடத்தத் தயாராகவுள்ளோம்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்கள் எதிர்பாராத தீய விளைவுகளை ஏற்படுத்தவல்லது. வரும் 19 ஆம் திகதி பிரசல்ஸ் நகரத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் நான்கு சந்திக்கவுள்ளன. இந்த முக்கிய சந்திப்பின்போது இங்கு இப்போது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்தும், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியம் குறித்தும், அதன் அடிப்படைகள் குறித்தும் விரிவாக ஆராயவுள்ளோம்.

சமாதான முயற்சியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்புமுனையில் நிற்கிறோம். இணைத் தலைமை நாடுகள் இது குறித்து ஆராய்ந்து எதிர்காலத்தில் பயனுள்ள உதவிகளை இலங்கைக்கு மேற்கொள்வது பற்றியும் அங்கு தீர்மானிக்கவுள்ளோம்.

அரசாங்கத்தின் விருப்பத்துடன் இணைந்து செல்ல நான் முடிவெடுத்ததால்தான் இம்முறை கிளிநொச்சிக்குச் செல்லவில்லை. இலங்கை அரசு இப்போது மிக நுணுக்கமாக சமாதான முயற்சிகள் பற்றியும், அதன் எதிர்கால அணுகுமுறை,உபாயம் குறித்தும் ஆராய்ந்து வருகிறது.

இந்த ஆய்வில் விடுதலைப் புலிகளுடனான தொடர்பு நோர்வே அனுசரணைப் பணி என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அரசு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு குறித்தும் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

நோர்வேயைப் பொறுத்தமட்டில் அது மிகவும் நேர்த்தியான முறையில் தனது அனுசரணைப் பணியை மேற்கொண்டு வருகிறது. அதற்கு இணைத் தலைமை நாடுகளும், யப்பானும் ஆதரவு எப்போதும் உண்டு

யப்பானுக்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்பில் ஈடுபடும் எண்ணம் எதுவும் கிடையாது. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவைப் பொறுத்தவரை, அதில் நோர்வே, டென்மார்க்,சுவீடன், பின்லாந்து, ஐஸ்லாந்து என ஐந்து நாடுகள் பங்குபற்றுகின்றன. இவர்களின் பணி சிறப்பானது.

இலங்கை அரசு இந்த ஐந்து நாடுகளில் நோர்வே தவிர்ந்த இன்னொரு நாட்டை யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைமைப் பொறுப்பில் ஈடுபடுத்துவது பற்றி விருப்புடன் ஆராய்ந்து வருகிறது.

ஏற்கனவே உள்ள நான்கு இணைத் தலைமை நாடுகளுடன் இந்தியாவும் இன்னுமொரு நாடாக இணையவிருப்பதாக வரும் செய்திகளில் உண்மையில்லை. ஆனால் இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வில் பிரதான நாடான இந்தியாவுடன் சர்வதேச சமூகம் பயனுள்ள கலந்துரையாடல்களிலும், ஆலோசனைகளிலும் ஈடுபட்டு வருகிறது. இந்தியா, இலங்கை சமாதான முயற்சிகளில் பல்வேறு அனுசரணைகளை வழங்கி வருகிறது. என்றார்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.